வலம்புரி
VALAMPURI
விலை ரூபா.7.00
சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 02 சனிக்கிழமை (14-02-2004) தொலைபேசி - 2223378 ஒலி 57

துரித தபால் பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான சகல தபால்பார்சல்கள் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

# கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி சுயேட்சையாகப் போட்டியிடுவார்?

(கொழும்பு)

**எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி சுயேட்சையாகப் போட்டியிட முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.**



தமிழ்க் கூட்டமைப்புக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரிக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் விளைவாக, கூட்டமைப்பில் இருந்து வெளியேறியுள்ள அவர், எதிர்வரும் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து முடிவு செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

கூட்டணி தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றில் இருப்பதால், கட்சியின் உதய சூரியன் சின்னத்தைப் பயன்படுத்துவதிலும் சிக்கல்கள் எழுந்திருக்கின்றது.

இந்நிலையில் சுயேட்சையாக புதிய சின்னமொன்றில் முன்னாள் எம்.பி. ஆனந்தசங்கரி போட்டியிடத் தயாராகிவிட்டதாகத் தெரியவருகிறது.

இவ்விடயம் குறித்து அவர் தனது கட்சிப் பிரமுகர்கள் ஆதரவாளர்களுடன் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமிழ்க் கூட்டமைப்பு உதயசூரியன் சின்னத்திற்குப் பதிலாக ரெலோவின் வெளிச்ச வீடு சின்னத்தில் போட்டியிட தீர்மானித்திருப்பதாகவும், இது குறித்து இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனவும் கூட்டமைப்புப் பிரமுகர்கள் தெரிவிக்கின்றனர்.

கூட்டணித் தலைவர் சங்கரி அணியினருக்கும், செயலாளர் சம்பந்தன் அணியினருக்கும் இடையே வேட்பாளர் நியமனம் தொடர்பில் இணக்கம் ஏற்படாது போனால் சுயேட்சையாகப் போட்டியிடுவது குறித்து உத்தியோக பூர்வமான அறிவிப்புகள் வெளியாகுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

## புலிகளின் பொறுமைக்கு சுவிஸ் அரசு பாராட்டு

(சூரிச்)

பிராந்திய விவகார அரசியல் துறை அதிகாரி பிளெய்ஸ் கோடெற், பிராந்திய பாதுகாப்பு மற்றும் அரசியல் விவகாரத்துறை அதிகாரி பீற்றர் மோரர் ஆகியோர் சு.ப.தமிழ்ச்செல்வன் குழுவினரைச் சந்தித்த போதே சுவிஸ் அரசின் இத்தகைய திருப்தியை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

தற்போது நின்றுபோயுள்ள சமாதானப் பேசுக்கள் மீண்டும் தொடர்வதற்கு சுவிஸ் அரசு தன்னாலான உதவிகளை வழங்குவதுடன், சுயாட்சியமைப்பு, நிலக் கண்ணிவெடிய (12ம் பக்கம் பார்க்க)

## ஜோசப் - கரிகாலன் நேற்றுச் சந்திப்பு

(மட்டக்களப்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கொத்தணி வாக்குச் சாவடிகள் அமைப்பது குறித்து விடுதலைப் புலிகளின் பிரமுகர் கரிகாலனுடன் மட்டு.மாவட்ட முன்னாள் எம்.பி.ஜோசப் பரராஜசிங்கம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

தேர்தல் கொத்தணிவாக்குச் சாவடிகளை தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைப்பது குறித்து தாம் பரிசீலித்த பின்னர் முடிவைத் தெரிவிப்பதாக புலிகளின் பிரமுகர் கரிகாலன் கூறினாரென்று முன்னாள் எம்.பி.ஜோசப் நேற்றிரவு வலம்புரிக்குத் தெரிவித்தார். (இ)

## அரச நியமனங்களை செய்வதற்குத் தடை

(கொழும்பு)

அரச துறைகளில், புதிய நியமனங்கள், பதவி உயர்வுகள் போன்றவற்றைக் கடந்த 8ம் திகதிக்கும் எதிர்வரும் ஏப்ரல் 2ம் திகதிக்கும் இடையில் வழங்க வேண்டாம் என்று சகல அமைச்சுச் செயலாளர்களுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அறிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கையில்; இக் காலப்பகுதியில் புதிய நியமனங்களோ, பதவி உயர்வுகளோ வழங்கப்பட்டிருந்தால் அவை செல்லுபடியாகாது.

இந்த அறிவித்தல் அமைச்சு, திணைக்களங்கள், அரச கூட்டுத் (12ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் நீடிப்பு ஜனாதிபதியின் சிபார்சை அரசியல் யாப்புசபை நிராகரிப்பு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவின் ,பதவிக் காலத்தை நீடிக்கும் ஜனாதிபதி சந்திரிகாவின் சிபாரிசை நேற்று கூடிய அரசியல் யாப்புச் சபை நிராகரித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவின் சிபாரிசை அங்கீகரிப்பதில்லையென்று அரசியல் யாப்புச் சபை தீர்மானித்ததாக அரசியல் யாப்புச் சபையின் தலைவர் முன்னாள் சபாநாயகர் (12ம் பக்கம் பார்க்க)

## வடக்குக் கிழக்கு உட்பட 13 மாவட்டங்களில் ஸ்ரீ.மு. காங்கிரஸ் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்கு உட்பட 13 மாவட்டங்களில் போட்டியிடுவதென முஸ்லிம் காங்கிரசின் உயர் பீடம் கடந்த புதன் அன்று தீர்மானித்துள்ளது.

கொழும்பில் ஆறு மணித்தியாலங்களுக்கு மேலாக ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது. இதன்படி யாழ்ப்பாணம், வன்னி, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, ஹம்பகா, களுத்துறை, கேகாலை, புத்தளம், குருநாகல், கண்டி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடவுள்ளது. கண்டி மாவட்டத்தில் ரவூப் ஹக்கிம் தலைமை வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார்.

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வான 10 அம்சங்களை முன்வைத்தே (12ம் பக்கம் பார்க்க)





தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் கைலாகு கொடுத்து வரவேற்பதையும், மற்றும் இத்தாலிய வெளிவிவகார அமைச்சின் இராஜதந்திரிகளையும் படத்தில் காணலாம்.

## உயர்தரப் பரீட்சை மே 6ந் திகதி

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் 6ந் திகதி ஆரம்பமாகி 31ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறுமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ம் திகதி நடைபெறவிருந்த போதிலும், பாராளுமன்றப் பொதுத் தேர்தல், வட மேல் மாகாண சபைத் தேர்தல் என்பன காரணமாக பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் [illegible] (இ)

## தலைமைகளை ஒன்றுபடக்கோரி முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றுபட வேண்டுமெனக் கோரியும், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை ஒரு அணியாக நின்று எதிர்கொள்ளுமாறு வலியுறுத்தியும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒலுவில கிராம முஸ்லிம் மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று நடத்தினர்.

அகில இலங்கை ஜமீத் உலமா ஒலுவில கிளை இந்த ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது. ஒலுவில ஜும்மா பள்ளிவாசலில் தொழுகை முடிவடைந்ததும் பள்ளிவாசலுக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (12ம் பக்கம் பார்க்க)

## அரசாங்கப் பாடசாலைகளின் தவணை விடுமுறையில் மாற்றம் கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் தவணைக்காலங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாராளுமன்றப் பொதுத் தேர்தல், வட மேல்மாகாண சபைத் தேர்தல் கபொத உயர்தரப் பரீட்சை போன்றவை காரணமாகவே பாடசாலைத் தவணைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி உயர்தரப் பரீட்சை நடைபெறாத பாடசாலைகளில் முதலாம் தவணை மார்ச் மாதம் 30ம் திகதி முடிவடைந்து இரண்டாம் தவணை ஏப்ரல் மாதம் 27ம் திகதி ஆரம்பமாகும். (12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் அபிவிருத்திகளைப் பாதிக்காது

## நன்கொடை வழங்கும் நாடுகள் கருத்து

(கொழும்பு)

சமாதான முயற்சிகளில் ஏற்படும் தாமதம் மனிதாபிமான உதவிகள் கிடைப்பதை நிறுத்த மாட்டாது என இலங்கைக்கு நன்கொடை வழங்கும் நாடுகளும், அமைப்புக்களும் தெரிவித்துள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி ஜோன்கூனி இது பற்றிக் கூறுகையில்,

இலங்கைக்கு சர்வதேச நாடுகள் வழங்கும் நிதியுதவி நிறுத்தப்படமாட்டாது. ஆனால் புதிய அரசாங்கம் ஆட்சிப் பீடமேறும் வரை பாரிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களும் பொருளாதார சீர்திருத்த முயற்சிகளும் ஸ்தம்பிதம் அடையலாம் என்றார்.

இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகத்தின் முதல் செயலாளர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

எமது அபிவிருத்தித் திட்டங்கள் மீது பொதுத்தேர்தல் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை இப்போது கூறமுடியாது.

ஆனால், வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்திகளுக்கான நிதியுதவிகளை தொடர்ந்து வழங்க தீர்மானித்துள்ளோம் என்றார்.

உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல் 'இலங்கைக்கு 13 கோடி டொலருக்கும் அதிகமான தொகையை ஒதுக்கும் நடைமுறைக்கு தமது பணிப்பாளர் சபை அடுத்த மாதம் அங்கீகரிக்கவுள்ளது' என்றார்.

இதேவேளை கடந்த ஆண்டு யூன் மாதம் டோக்கியோவில் நடைபெற்ற நன்கொடை வழங்கும் மாநாட்டில் 45 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேலான உதவிகளை வழங்கப்போவதாக சர்வதேச நாடுகள் உறுதியளித்துள்ளமையும், சமாதான நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணப்படும் பட்சத்திலேயே இந் நிதியுதவிகள் வழங்கப்படும் என நிபந்தனை விதித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-60,10)

# வெள்ளிக்கிழமை தேர்தல் முஸ்லிம் மத்தியில் அதிருப்தி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலை ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பது குறித்து முஸ்லிம்கள் மத்தியில் கடும் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது.

இதனையடுத்து தேர்தல் நடைபெறும் திகதியை வேறு ஒரு தினத்திற்கு மாற்ற வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க ஆகியோரிடம் முஸ்லிம் வெகுஜன அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

வெள்ளிக்கிழமை முஸ்லிம்களின் விசேட தினமாக அனுஷ்டிக்கப்படுவதினால் அத்தினத்தில் நண்பகல் 12 மணிமுதல் பி.ப 2 மணிவரை முஸ்லிம்கள் பள்ளி வாசல்களில் தொழுகையில் ஈடுபடுவார்கள்.

இதனால் 2 மணித்தியாலங்கள் தேர்தலில் வாக்களிக்க முடியாமலிருக்கும் என்றும் முஸ்லிம் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (தி-61.10)

# சுதந்திர முன்னணியுடன் இணைய சமசமாஜக் கட்சி தீர்மானம்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட லங்கா சமசமாஜக் கட்சி தீர்மானித்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வது என்ற நிலைப்பாட்டிற்கு தமது கட்சி இணங்கியிருப்பதாகத் தெரிவித்த பட்டி வீரக்கோன்,

இது தொடர்பாக ஜனாதிபதியுடன் தான் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அந்தப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிந்ததாலேயே தமது கட்சி இந்தத் தீர்மானத்தை எடுத்ததாகவும் குறிப்பிட்டார். (தி-61,10)

# இலங்கை மாணவர்களுக்கு இந்தியா புலமைப்பரிசில்

(கொழும்பு)

இந்தியப் பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கை நெறிகளைப் பயில்வதற்காக 55 இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

இதில் 5 புலமைப்பரிசில்கள் பொதுநலவாய புலமைப் பரிசில் திட்டத்தின் கீழும், 3 புலமைப்பரிசில்கள் இந்திய இலங்கை கலாசார பரிமாற்றத் திட்டத்தின் கீழும் மீதி 47 புலமைப்பரிசில்கள் இந்திய தூதரகத்தினாலும் வழங்கப்படவுள்ளன.

இந்தியத்தூதரகம் மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சுடன் இணைந்து இப்புலமைப்பரிசிலுக்குத் தகுதியான மாணவர்களைத் தெரிவுசெய்யவுள்ளது.

இந்தப் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர். இம்மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு-7 வோட் பிளேசில் அமைந்துள்ள 3ம் நிலைக்கல்வி அமைச்சுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (தி-61.10)

# பௌத்த தேரர்கள் எவரும் அரசியலில் ஈடுபடக் கூடாது

## மெத்தானந்த தேரர் வேண்டுகோள்

(கொழும்பு)

பௌத்த தேரர்கள் அரசியலில் ஈடுபடுவது உகந்ததல்ல என எல்லாவெல மெத்தானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நுகேகொடவில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில,

நாட்டில் அழிவடைந்துவரும் வளங்களையும், கலாசாரங்களையும் பாதுகாப்பதற்கு பௌத்த தேரர்கள் முன்வரவேண்டும்.

அரசியலில் இறங்கி வீணாக மக்களின் குற்றச்சாட்டுகளுக்கும் குறைகளுக்கும் ஆளாகுவதா[ல்] பௌத்த மதத்தை பிறம[த]தவர்கள் அவமதிக்கும் நிலைதான் ஏற்படும்.

அத்துடன் நீண்டகால பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பௌத்த தேரர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அதுமட்டுமன்றி இனப்பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நாட்டில் அமைதியானதொரு சூழ்நிலை உருவாக சகல பௌத்தபிக்குகளும் பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (தி-61.10)

# திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பணிமனைத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு சங்கத்தலைவர் ஆ.சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பணிமனையை இந்து கலாசார முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் வைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார். இந்நிகழ்வில் கூட்டுறவு அமைச்சர் அல்ஹஜ் ஏ.அர்.எம்.அப்துல்காதர் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், விடுதலைப்புலி பிரமுகர்கள் ஆகியோர் விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-3)

# பட்டப்பகலில் துணிகரத் திருட்டு

(வடலியடைப்பு)

பண்டத்தரிப்பு செட்டிக்குறிச்சிப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து சுமார் 1 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சுப்பிரமணியம் புனிதவதியார் என்பவரது வீட்டில் பட்டப் பகலில் இடம்பெற்ற மேற்படி கொள்ளைச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

வீட்டு உரிமையாளர்கள் சம்பவதினம் வீட்டில் இருக்காததை அறிந்து வீட்டினுள் உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த சங்கிலி காப்பு மற்றும் பதக்கம் ஆகிய ஒரு இலட்சம் ரூபா பெறுமதி யான தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இதனுடன் தொடர்புடைய நபர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாகத் தெரியவருகிறது. (தி-21)

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் 5 S முறையில் விஞ்ஞானம், கணிதம் சம்பந்தமான கற்கை முறைக்கான நிர்வாகக் கட்டமைப்பு விளக்கச் செயலமர்வு ஒன்று இன்று சனிக்கிழமை யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் மேற்படி பாடசாலைச் சுற்றாடலில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் 50 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-16)

# புதிய முன்னணியில் இணைய கம்யூனிஸ்ட் கட்சி முடிவு

(கொழும்பு)

ஜே.வி.பி., ஸ்ரீ.சு.கட்சி இணைந்து அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ராஜா கொல்லுரே நேற்று முன்தினம் இவ்வறிவித்தலை விடுத்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இனப்பிரச்சினைத் தீர்வு உட்பட இரு முக்கிய அணுகு முறைகள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர [முன்]னணியுடன் உடன்படிக்கை ஒன்று கைத்திசாத்திடப்படவுள்ளது.

இவ்வுடன்படிக்கையில் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலமே தீர்வு காணப்பட வேண்டும். பதவிக்கு வரும் எந்த அரசாக இருந் தாலும் அக்கட்சி எதிர்க்கட்சியுடன் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற விடயங்களே இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திடப்படவுள்ளது. (தி-62)

# கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலையில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் பிரதமவிருந்தினராக கலந்துகொள்வார்.

மேற்படி கண்காட்சி நிகழ்வு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் எதிர்வரும் 21ந் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.(தி-3)

# ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் யாழ்.பருத்தித்துறை வீதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இவ்வாண்டுக்கான நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

நீண்டகாலமாக அபிவிருத்திப் பணிகள் ஏதுமின்றி இவ் வீதியின் பெரும்பாலான பகுதிகள் குன்றும் குழியுமாக இருந்து வருகின்றன.

யாழ்ப்பாணத்திலுள்ள மிக நீளமான வீதிகளில் ஒன்றாகக் காணப்படும் இவ் வீதி போக்குவரத்துக்கு ஏற்ப அகலமாகக் காணப்படவில்லை. இதனால் இவ் வீதியில் விபத்துக்களும், விபத்துக்களைத் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன.

இதனையடுத்து மேற்படி வீதியை அகலமாகப் புனரமைப்புச்செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஒதுக்கப்படும் நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடபிராந்திய பொறியியலாளர் ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (தி-35)

# பெருவிழா

(சில்லாலை)

மாதகல் கடற்கரையில் அமைந்துள்ள புனித லூர்து அன்னை தேவாலயத்தின் பெருவிழா கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இன்று சனிக்கிழமை மாலை தேவ நற்கருணை திருவிழாவும் நற்கருணை சுற்றுப் பிரகாரமும் இடம் பெறவுள்ளன. (தி-58,110)

# சிவபுராண புத்தகங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 18ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சிவராத்திரி தினத்தை முன்னிட்டு, மில்க்வைற் தொழிலகம் சிவபுராணப் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

எனவே, இந்து சமய மன்றங்கள், பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் ஆகியன காங்கேசன்துறை வீதியிலுள்ள மில்க்வைற் தொழிலகத்தில் இப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளலாமென அதன் அதிபர் இ.[illegible] அறிவித்துள்ளார். (தி-18)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.

### படவரைஞர்களைப் பதிவு செய்தல் – 2004

**தேவையான தகைமைகளும் நிபந்தனைகளும்**

1. அங்கீகரிக்கப்பட்ட படவரைஞர் பயிற்சி நெறி அல்லது தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (குடியியல்) அல்லது தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் (கணிய அளவையியல்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் இதற்குச் சமமான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
2. நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிபந்தனைகளுக்கமைய படம் வரையப்பட வேண்டும்.
3. சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களுடன் தொழில்நுட்பச் சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளையும் இணைத்து விண்ணப்பித்தல் வேண்டும்.
4. தேர்ந்தெடுக்கப்படும் படவரைஞர்கள் பதிவுக் கட்டணமாக ரூபா 500/- செலுத்துதல் வேண்டும்.
5. பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் 2004.02.27 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

திரு.சிதம்பரப்பிள்ளை பசுபதி,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

பிரதேசசபை அலுவலகம்.
கரவெட்டி.
12.02.2004

(C/7270)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுவாயுத நடவடிக்கையில் கடும் அணுகுமுறை

# கடைப்பிக்கப்பட வேண்டும் என்கிறார் புஷ்

(வாஷிங்டன்)

சர்வதேச சமூகம் அணுவாயுத நடவடிக்கை குறித்து கடுமையான அணுகு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வாஷிங்டனில் தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய போதே புஷ் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் குறித்த விடயங்கள் அமெரிக்க அரசியலில் பாரிய தாககத்தை ஏற்படுத்தி வரும் நிலையில் அமெரிக்க ஜனாதிபதியின் இந்த உரை இடம்பெற்றது.

இந்த உரையின் போது மீக முக்கியமாக சர்வதேச அணுத்திட்ட நடவடிக்கைகள் குறித்து புஷ் கருத்து வெளியிட்டார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, சர்வதேச அணுசக்தி மையம போன்றவற்றின் கைகளை இந்த விடயத்தில் பலப்படுத்துவதோடு சர்வதேச வலய அமைப்பின் ஊடாக அணுவாயுத தொழில் நுட்பம் பிற நாடுகளுககு விற்கப்படுவதைத் தடை செய்யும புதிய கட்டுப்பாடுகள் கொண்டுவரபபட வேண்டும் என்றும் அவர் தனது உரையில் வலியுறுத்தியுள்ளார்.

வடகொரியாவும் ஈரானும் இவ்வாறு அணுத்திட்டங்களை செழுமைப் படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதனால் இவற்றை உடனடியாக இடைநிறுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

சர்வதேச அணுசக்தி மையம் தற்போது இயங்கிவரும் முறை குறித்துக் கண்டனம் தெரிவித்த புஷ் ஈரான் போன்ற நாடுகள் இவற்



றின் சட்டதிட்டங்களை மீறுவதை இந்த அமைப்பு அனுமதித்து வருவதாகவும் தெரிவித்திருக்கின்றார். (து-9)

## சோனியாகாந்தி சென்னை விஜயம்

(சென்னை)

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி ஒரு நாள் பயணமாக நேற்றுப் பிற்பகல் சென்னை வந்தார்.

விமான நிலையத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜி.கே வாசன், 'அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலர் கமல் நாத், தி.மு.க. முன்னாள் மத்திய அமைச்சர் டி.ஆர் பாலு உட்பட பலர் அவரை வரவேற்றார்கள். (து-9)

## ஐவரிக் கோஸ்ட் ஜனாதிபதி பிரிவினைவாத அமைப்புடன் பேச்சு

(யாமௌஸ்ஸொக்வோ)

ஐவரிக் கோஸ்ட்டின் பிரிவினைவாத அமைப்பு பலம்வாய்ந்த நிலையில் உள்ளதனால் அவர்களோடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொணடு வந்து அவர்களுடன் பேசசுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாக அந்த நாட்டின் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நெருபபுக்குளங்களாகக் காட்சியளிக்கும் யுத்த பூமியைத் தொடர்ந்து ரசித்துக் கொண்டிருக்க முடியாத காரணத்தினாலேயே இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அந்த நாட்டின் ஜனாதிபதி லோரன் வைஹறவ்வோ நேறறு முன்தினம் இரவு தொலைக் காட்சியில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

கொக்கோ உற்பத்தியில் முன்னணி இடத்தை வகிக்கும் ஐவரிக் கோஸ்ரின் பொருளாதாரம் உள்நாட்டு யுத்தத்தின் காரணமாகப் பெருமளவில் பாதிப்படைந்துள்ளமை சர்வதேச சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

## ஜோஷ் லூயிஸ் தேர்தலில் வெற்றி பெற்றால் ஈராக்கிலிருந்து ஸ்பெயினிய துருப்புக்களை வாபஸ்வாங்கப் போவதாக தெரிவிப்பு

ஸ்பெயினின் எதிர்க்கட்சித் தலைமை வேட்பாளரான ஜோஷ் லூயிஸ் தேர்தலில் தனது கட்சி வெற்றி பெற்றால் ஈராக்கில் இருந்து ஸ்பெயினியத் துருப்புக்களை வாபஸ் வாஙகப் போவதாக தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான எதிர்க்கட்சித் தலைமை வேட்பாளரான ஜோஷ் லூயிஸ் அத் தேர்தலில் தனது கட்சி வெற்றி பெற்றால் தற் போதைய பிரதமர் ஜோஷ் மரியா அஸமாரெனிரிலி ஈராக்குக்கு அனுப் பிவைத்துள்ள துருப்புக்களை வாபஸ் வாஙகப் போவதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷின் நிபந்தனையின் பேரிலேயே பிரதமர் ஜோஷ் மரியா தன்நாட்டுத்துருப்புக்களை ஈராக்கில தீவிரவாதிகளிடம் பணயம் வைத்திருப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள ஆயிரத்து 300 ஸ்பெயின் துருப்புக்களையும் மீண்டும் தாயகத்துக்கு அழைத்து வருவதற்கு தனக்கு ஆதரவை வழங்குமாறு ஸ்பெயின் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈராக் யுத்தத்தின் பின்னர் ஸ்பெயின் இராணுவ வீரரொருவர் உயிரிழந்தும், 5க்கும் அதிகமானோர் காயங்களுக்கும் உள்ளாகியும் உளளமை குறிப்பிடத்தக்கது. (து-9)

## களஞ்சியசாலைக் கட்டடம் இடிந்து விழுந்ததில் 6 பேர் பலி

(டுபாய்)

டுபாயிலுள்ள களஞ்சியசாலைக கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 6 பேர் உயிரிழந் திருப்பதுடன் மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

களஞ்சியசாலைக் கட்டடத்தின் மறு சீரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இந்தக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் இந்த வபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் இந்தியா பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே உயிரிழந்திருப்பதாக ஐக்கிய அரபு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (து-9)

## தி-மு-க மாநாட்டைத் தடை செய்ய மனுச் செய்தவருக்கு ரூபா 3000 அபராதம்

### சென்னை உயர் நீதிமன்றம் விதித்தது

(சென்னை)

விருதுநகரில் தி.மு.க. இம மாதம் நடத்தவிருக்கும் மாநாடடைத் தடை செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தள்ளுபடி செய்தது.

விருதுநகரைச் சேர்ந்த செண்பகமூர்த்தி என்பவர் தாககல் செய்த மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் சிர்புர்கர், இப்ராஹிம் கலிபுல்லா ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழு மாவட்ட நிர்வாகத்தையோ காவல்துறை அதிகாரியையோ அணுகாமல் உயா நீதிமன்றத தில் மனு தாக்கல செய்தது தவறு என்று கூறி மனுவைத் தள்ளுபடி செய்தனர்.

இநத மனுவைத் தள்ளுபடி செய்த நீதிபதிகள் மனுதாரருககு 3000 ரூபா அபராதமும விதித்தனர். (து)

## இஸ்ரேல் - பலஸ்தீன பேச்சுவார்த்தைக்கு இருநாட்டு தலைவர்களையும் ஒன்றிணைக்கும்

### -முயற்சியில் வாஷிங்டன்-

(வாஷிங்டன்)

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இருநாட்டுத் தலைவர்களையும் ஒன்றிணைக்கும் முயற்சிகளில் வாஷிங்டன் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக தடைப்பட்டிருந்த இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன்,பலஸ்தீனப் பிரதமர் அகமட்குரேய் ஆகியோருக்கிடையிலான பேச்சுக்களை வெகுவிரைவில் ஆரமபிக்க அமெரிக்கா விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மேற்குக்கரை காஸாப் பகுதியில் மேற்கொள்ளப் பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் உயிர் இழந்தமை தொடாபாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரி வித்துள்ளார். (து-9)

## வீரப்பனைப் பிடிக்க தொடர்ந்து முயற்சி

(சென்னை)

சந்தனக் கடக்கல் வீரப்பனைப் பிடிக்க தமிழக-கர்நாடக கூட்டு அதிரடிப்படையினர் தொடர்ந்து முயற் சிகள் மேற்கொண்டு வருவதாக தமிழக அதிரடிப்படை தலைமை அதிகாரி விஜயகுமார் தெரிவித் திருக்கிறார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், வீரப்பன் தொடர்ந்து இடத்தை மாற்றிக் கொண்டிருப்பதால் தகவல் கிடைத்து அதிரடிப்படையினர் அங்கு செல்வதற்குள் அவன் தப்பி விடுவதாகக் குறிப்பிட்டார்.

வீரப்பனை இரண்டு நாட்களில் பிடித்து விடுவோமெனக் கர்நாடக உள்துறை அமைச்சர் குறிப்பிட்டிருப்பது பற்றிக் கேட்டதற்கு அவருடன் இது குறித்துத் தான் எதுவும் பேசவில்லை என்றார்.

கர்நாடக அதிகாரிகளுடன் அதிரடிப்படையின் நடவடிக்கை குறித்துப் பேச்சு நடத்தியிருப்பதாகக் குறிப்பிட்ட விஜயகுமார் தற்போது வீரப்பனுடன் மூன்று அல்லது நாலு பேர் மட்டுமே இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். (து)



அல்கெய்டா அமைப்புக்கு ஆயுதங்கள் சம்பந்தமான தகவல்களை விற்பனை செய்ததாகச் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ வீரர்கள்.

## ஈராக்கில் நேரடித் தேர்தலுக்கு கருத்தொற்றுமை வளர்கிறது

### கோபி அனான்

(நீயூயோர்க்)

ஈராக்கில் இடைக்கால நிர்வாகத்தின் ஊடாக அல்லாமல் நேரடி



யாகத் தேர்தலை நடத்துவது பற்றி கருத்தொற்றுமை வளர்ந்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

ஆனால் எப்பொழுது வாக்களிப்பு நடைபெற வேண்டும் என்ற முக்கிய பிரச்சினை பற்றி அவர் எதுவும் கூறவில்லை.

தேர்தலை முன்னதாகவே நடத்துவதன் சாத்தியக்கூறுகள் பற்றி ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் குழுவொன்று ஈராக்கியத் தலைவர்களுடன் ஆராய்ந்து வருகிறது.

ஈராக்கின் ஷியா சமூகத் தலைவரான அயத்துல்லா அலி யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் நேரடித் தேர்தலை நடத்துமாறு கூறுகிறார். (து-9)

## காவல் துறையின் நடவடிக்கை நியாயமானதே தமிழக சட்டக் கல்லூரி விவகாரம் குறித்து ஆணைக்குழு அறிக்கை

(சென்னை)

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம சென்னை சட்டக் கல்லூரி விடுதி அருகே நடைபெற்ற வன்முறைக சம்பவத்தினை அடுத்து சட்டக் கல்லூரி வளாகத்துக்குள் காவல் துறை மேற்கொண்ட வன்முறைகள் குறித்து விசாரிக்க அமைக்கபபட்ட நீதிபதி பக்தவதசலம் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் சட்ட மன்றத்தில் தாக்கல் செய்யப்படடது.

காவல் துறையினர் மேற்கொண்ட குறைந்த அளவு பலப்பிரயோகம் நியாயமானது தான் என்றும், அதில் தவறு ஏதும் இல்லையென்றும் நீதிபதி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக 35 மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை திரும்பப் பெறலாம் என்றும் இந்தச் சம்பவத்தின் போது காயமடைந்த 5 மாணவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா இழப்பீடு அளிக்கலாம் என்றும் நீதிபதி தமது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளார்.

இந்தப் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 45 தேசவழமை அதிகாரம் 4

### நன்கொடை

**அவர்களுடைய சகோதரங்களின் பிள்ளைகளுக்கு நன்கொடை**

2. ஒரு புருஷனும் பெண்சாதியும் தங்களுக்குப் பிள்ளைகளில்லாதபடியால், தங்கள் ஆஸ்திகளிற் சில பகுதியைத் தங்கள் அண்ணன் தம்பி அக்கை தங்கைமார் பிள்ளைகளுக்கென்கிலும் நன்கொடையாகக் கொடுக்கவேண்டும் என்று கண்டால் இது காரியம் இரண்டு திறத்தில் உரிமைக்காரருடைய சம்மதியோடும் நடப்பிக்கவேண்டியது. அந்த உரிமைக்காரர் அதற்குச் சம்மதியாதிருந்தால், அப்போது இந்தப் புருஷனும் பெண்சாதியும் தங்கள் முதுசொத்திலும் சீதனத்திலும் பத்திலொரு பங்கு கொடுக்கலாம். அதிகங் கொடுக்கப்படாது. கடன் மிகுதியில்லாதிருந்தால் வாழ்க்கைப்பட்டிருக்கையில் தேடப்பட்ட தேட்டத்திலும் சில பகுதி கொடுக்கலாம். இப்படி நன்கொடை பெற்ற அண்ணன் தம்பி, அக்கை தங்கைமார் பிள்ளைகளென்கிலும் மறுபேரென்கிலும் பிள்ளையில்லாமற் செத்து விட்டார்களேயானால், அப்போது அந்த நன்கொடை பெற்றது ஆண்பிள்ளையானால் அந்த உரிமை அவனுடைய அண்ணன் தம்பிமாருக்கும், பெண்பிள்ளையானால் அந்த உரிமை அவளுடைய அக்கை தங்கைமாருக்கும் கிடைக்கும். இவர்கள் இல்லாவிட்டால், பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் இந்த உரிமை சேரும். பிள்ளைகள் பேரப்பிள்ளைகளும் இல்லாவிடடால் நன்கொடை பெற்றவர்களினுடைய பிதாமாதாவையடையும். அவர்களின் பிற்காலம் அந்தப் பிதாவழியில் உரிமை அவனுடைய அண்ணன் தம்பிமாருக்கும் அந்தப் பிதிர் வழியாருக்கும், அவர்கள் இல்லாத காலத்திலே, அவனுடைய அக்கை தங்கைமாருக்கும், அந்தப் பிதிர்வழியாருக்கும் சேரும். அப்படியே மாதாவழிக்கும் அவளுடைய அக்கை தங்கைமார்களுக்கும், அந்தப் பிதிர்வழியாருக்கும், அவர்கள் இல்லாவிட்டால் அவளுடைய அண்ணன் தம்பிமார் அந்தப் பிதிர்வழியாருக்கும் சேரும். இந்த இரு திறத்து உரிமைக்காரரும் இல்லாதிருந்த காலத்தில் இந்த நன்கொடை ஆஸ்தி மறுபடியும் கொடுதத பேர்களுக்கென்கிலும் அவர்களுடைய முடுகின உரிமைக்காரருக்கென்கிலுஞ் சேரும்.

**புருஷனும் பெண்சாதியும் மறுபேரிடத்தில் ஒரு காணியை நன்கொடையாகப் பெற்றபோது**

3. ஒரு புருஷனென்கிலும் பெண்சாதியென்கிலும் மறுபேரிடத்திலிருந்து ஒரு வயலானாலுந் தோட்டமானாலும் நன்கொடையாகப் பெற்றுக்கொண்டதேயுண்டானால், அவர்களிரண்டு பேரில் ஒருவர் செத்து ஆதனம் பிரிவிடப்படுகின்ற காலத்தில் அந்த நன்கொடையில் அழிவு சேதம் நீக்கி மிச்சமாயிருந்த அவ்வளவுமே அந்த நன்கொடை பெற்ற புருஷனுடைய அல்லது பெண்சாதியினுடைய உரிமைக்காரருக்குச் சேருமதியாயிருக்கும். உயிரோடிருக்கும் போது மறுபேருக்கு விற்றுப்போட்ட அல்லது பிறருக்கு அடையப்பண்ணப்பட்ட யாதொரு பகுதிக்கு உரிமைக்காரர் விலைகேட்கப்படாது. ஆனால் அந்தக் காணியிலுண்டாய் வரப்பட்ட புரோசனம் அவர்கள் கலியாணம் முடித்திருந்த நாள் வரையில் தேடப்பட்ட தேட்டத்துடனே சேருகின்றது.

ஆனால், யாதொருவர் ஒரு இறை, மாடு, ஆடு மற்றும் வர்த்தனையுடண்டாகிறவைகளில் யாதொன்றை நன்கொடையாகப் பெற்றிருந்தால், அதுவும் அதிலுண்டாயிருக்கப்பட்ட வர்த்தனைகளுங் கூட நன்கொடை பெற்ற புருஷன் அல்லது பெண்சாதி புறமாகச் சேரும். அவைகளில் விலை போனவைகள் கொடுத்தவைகளின் விலை தரவேண்டுமென்று உரிமைக்காரர் கேட்கவொண்ணாது.

**இரண்டு ஆண்பிள்ளைகளில் ஒருவனுக்குக் கொடுக்கும் நன்கொடை எவ்வளவு பெலப்புடையதென்பது**

4. ஒரு புருஷனுக்கும் பெண்சாதிக்கும் பெண்பிள்ளைகளில்லாமல் இரண்டு ஆண்பிள்ளைகள் மாத்திரம் உண்டாயிருந்தால் அந்தப் பிதாவாயிருக்கிறவன் இளையவனைப்பார்க்க மூத்த ஆண்பிள்ளை பேரிலே கொண்ட மிகுந்த அன்பினாலே அவனுக்குத் தன்னுடைய முதுசொத்தில் ஒரு பகுதியை நன்கொடை கொடுக்கவேண்டுமென்று கண்டால் அப்படிக் கொடுக்கப்பட்டவைகளும் உண்டு. ஆனால் ஒரு முறைமையான உறுதியின் பேரால் அப்படிச் செய்யலாம். சில காலத்தின் பின் இளையவன் பிள்ளையில்லாமல் இறந்து போக, பிதாவும் மாதாவும் முந்தியும் பிந்தியும் அப்படி இறந்துவிட்டார்களேயானால் அந்த நன்கொடை உறுதியைக்கொண்டு காரியமில்லை. சகலமும் அந்த நன்கொடையாகப் பெற்ற மூத்த மகனுக்குடையவைகளாம். அவனும் பிள்ளையில்லாமற் செத்தானாகில் அவனுடைய ஆஸ்தி உரிமை சேரும் விதம் எப்படியெனில் பிதாவுடைய முதுசொமும் ஒன்றுபாதி கடன் போக்கித் தேட்டத்தில் ஒன்று பாதியும் அவனுடைய அண்ணன் தம்பிமாருக்கும், மாதாவின் சீதனமும் கடன் ஒன்று பாதி நீக்கித் தேட்டத்தில் ஒன்று பாதியும் அவளுடைய அக்கை தங்கைமாருக்கும் கிடைக்கும். ஆனால் இந்த மாதா வழியில் உரிமைக்காரர் மூத்த மகனுக்குப் பிதாவானவன் கொடுத்த அந்த நன்கொடையின் பேரால் தொடரவொண்ணாது. மாதாவானவள் கொடுத் நன்கொடைகளுண்டானாலும் அந்தப் பிதாவழியில் உரிமைக்காரர் தொடரவொண்ணாது. ஆனால் பிதாமாதாவல்லாமல் வேறொருவர் நன்கொடை கொடுத்திருந்தால் அப்போது அந்த நன்கொடையை இரண்டு திறத்து உரிமைக்காரரும் பிரிவிட்டுக் கொள்வார்கள்.

ஒரு புருஷனுக்கும் பெண்சாதிக்கும். இரண்டு அல்லது மூன்று அல்லது அதிகமான ஆண்பிள்ளைகளுண்டானால் அவர்களில் ஒருவனுக்கு ஒரு காணி அல்லது தோட்டத்தை நன்கொடையாகக் கொடுத்து அவன் அதைச் சில காலம் ஆட்சிப்பெற்றதின் பிறகு பிதாவும் மாதாவும் காலஞ் சென்று போனதேயுண்டானால் அவர்களுடைய பொது ஆதனம பிரிவிடுகிறதற்கு முன்னே அந்தப் பிதாவாலே நன்கொடைபெற்றபிள்ளை அந்த நன்கொடைக் காணியைத் தான்பெற்றுக் கொள்ளும் படி கேட்கலாம். மற்றைய பிள்ளைகள் அதை இல்லையென்று சொல்லவும். முடியாது. ஆனால் அவன் அதை நன்கொடையுறுதியினால் ஒப்பனைபண்ணவும் வேண்டியது. அப்படி ஒப்பனை ஆஸ்தியுடனே சேர்த்துப் பிரிவிடப்படும்.

**ஆண்பிள்ளைகள் விவாகஞ் செய்யாதவர்களாயிருக்கிற காலத்தில் இனத்தார் முதலானவர்கள் கொடுக்கும் நன்கொடையேயல்லாமல் மறு நன்கொடை அவர்கள் விவாகம் பண்ணும் போது அவர்களுக்குடையதாகாதென்பது**

5. ஆண்பிள்ளைகள் கலியாணம் முடிக்குமளவாக இளந்தாரிகளாயிருக்கிற காலத்திலே தேடிக்கொண்ட சகல ஆஸ்தியும் அவர்கள் விவாகம் முடிக்கையில் பொது ஆஸ்தியைச் சேரும்படி விடவேண்டுமென்று முன்வகை காண்பித்திருகிறோமல்லவோ. ஆனால் அந்த ஆண பிள்ளைக்கு முடுகின உறவுமுறையாரென்கிலும் மறுபேரென்கிலும் யாதொரு நனகொடை கொடுத்திருந்தால் இந்த நன்கொடை புறநீங்கலாகக் காணவேணும் இது அந்தத் தேட்டததுடனே சேராது. நன்கொடையானது எப்போதும் புறம்பாக நன்கொடை பெற்றவர்களுக்கே உடையது.

பிள்ளையில்லாத புருஷனும் பெண்சாதியும் தாங்கள் கலியாணம் முடித்திருக்கிற காலத்திலே தேடிய ஆஸ்தியில் யாதொரு பகுதியைப் புருஷனானவன் பெண்சாதியை அறியாமற் தன்னுடைய உரிமைக்காரராயிருக்கிறவர்களுக்குக் கொடுத்திருந்தால் அந்தப் பெண்சாதியும் புருஷனும் காலஞ்சென்று தேட்ட ஆஸ்தி பிரிவிடப்படும் போது அந்த ஆஸ்தியிற் புருஷனுடைய உரிமைக்காரர் முன்பெற்றிருந்த கணியம் பெண்சாதியினுடைய உரிமைக்காரரும் பெற்றுக் கொண்ட பின்பு, மிஞ்சி[illegible]

(தொடரும்)



வடமாகாண சிகை அலங்கரிப்புச் சங்கத்தினால் புதிதாக ஆஸ்பத்திரி வீதியில் நீர்மாணிக்கப்பட்ட பணிமனையின் அங்குரார்ப்பண விழாவில், சங்கத்தலைவர் S.சிறீராஜன் உரையாற்றிக் கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.
படம் :-சுண்டுக்குளி நிருபர்.

## கொழும்பு பல்கலைக்கழக கலைப்பீடம் மூடப்பட்டது

(கொழும்பு)

கொழும்புப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட குழு மோதலை அடுத்து, நேற்று முதல் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடம் மூடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெறவிருந்த மாணவர் பேரவை தெரிவு சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகளை அடுத்து இவ்விரு மாணவக்குழுக்கள் இடையே மோதல் ஏற்பட்டது.

இம் மோதல் சம்பவத்தைக் கட்டுப்படுத்த பல்கலைக்கழக மாணவ ஆலோசகர் குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கை தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, மேற்படி பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது. (தி-62)

## திறந்த பல்கலைக்கழக சட்டமானி கற்கை நெறிக்கு ஒருவர் மட்டுமே தெரிவு

(யாழ்ப்பாணம்)

2003 ஆம் ஆண்டு இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தின் ஊடாக நடத்தப்பட்ட சட்டமானி அனுமதிப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இருந்து ஒருவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்திலிருந்து இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பிராந்திய நிலையத்தின் ஊடாக சுமார் 300 பேர் விண்ணப்பித்தனர்.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலிருந்து கடந்த 2002 ஆம் ஆண்டு சட்டமானி கற்கை நெறிக்கு 22 பேரும், 2001 ஆம் ஆண்டு 14 பேரும், 2000 ஆம் ஆண்டு ஒருவரும் தெரிவு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-19)

## தென்னிலங்கையரைக் கவரும் குடாநாட்டு நல்லெண்ணெய்

(நவாலி)

யாழ்.குடாநாட்டு உற்பத்திப் பொருட்களுக்குத் தென்னிலங்கை வாசிகளிடம் அதிக கிராக்கியிருந்து வருவதற்கு மற்றுமோர் எடுத்துக் காட்டாக ஆனைக்கோட்டை நல்லெண்ணெய் விளங்கி வருகிறது.

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலை அண்டிய பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் நல்லெண்ணெயை முன்னர் யாழ்.குடா நாட்டு மக்களே அதிகளவில் கொள்வனவு செய்து பாவித்து வந்தனர்.

ஆயினும், ஏ -9 பாதையூடாக தென்பகுதி உட்பட மற்றும் பல இடங்களிலிருந்து யாழ்.குடாநாட்டிற்கு வந்து போகும் பல்லின மக்களும் இந் நல்லெண் ணெயை விரும்பி முண்டியடித்து வாங்கிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இதனால், ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலை அண்டிய பகுதிகளுக்குத் தென்னிலங்கை வாசிகளின் வருகை ஓர் வரப்பிரசாதமாக அமைநதுள்ளது. (தி-102)

## முப்படைத் தளபதிகளுடன் தேர்தல் ஆணையாளர் பேச்சு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க முப்படைத் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ள இச்சந்திப்பில் வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளினதும் எல்லைப் பகுதிகளினதும் பாதுகாப்பு மற்றும் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு வாக்களிப்பில் கலந்து கொள்ளப் போகிறார்கள் என்பது குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன், இதற்காக யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உள்ள பல இலட்சம் வாக்காளர்கள் ஒரே தினத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் செல்லவேண்டும் என்பதால் சோதனை நிலையங்களில் கெடுபிடிகளை தளர்த்துவது குறித்து இங்கு ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, திங்கட்கிழமை நடைபெற்வுள்ள இச்சந்திப்புக்கு முன்னதாக இன்று சனிக்கிழமை வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த அரச அதிபர்கள் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோருடன் தேர்தல் ஆணையாளர் பேசவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.

# உணர்வுகளோடு ஒன்றிப்போன காதல் உயர்ந்த பண்புகளின் உள்ளடக்கமே!

உன்னதமான உயிர்த்துடிப் பின ஓசைகளை மனமாளிகையில்



வாசித்து எதிரொலிக்கவைத்து யாசித்துக் கொளளும் சக்தி காத லுக்குத் தானுண்டு. வரலாறுகளுகது வடிவம் கொடுப்பதும் வாழ்க்கைக்கு உநதுசக்தியாகவிருப்பதும் காதல் மட்டும்தான்.

## காதலின் உன்னதம்

புரிந்துணர்வு, நம்பிக்கை, ஒற் றுமை, விட்டுக் கொடுப்பு, தியாகம, பக்தி, புனிதம், புதுமை எனும் உயரிய பண்புகளின் உள்ளடக்கமே உண் மைக் காதலின் கரு.

மனித வாழ்வில் காதல எனும் சக்திக்கே முதலிடம என்பது மறுக்க முடியாத உண்மை. காதல் எனும சக்தி ஒவ்வொரு மனித மனங் களிலும் உட்பொருளாக உடனி ருக்கிறது.

காதல் புனிதமானது. அது மனித உணர்வுகள் அனைத்தி லும் உன்னதமானது. உயிர்வாழ் தலை அர்த்தப்படுத்துவது இந்தக காதல் எனும் உயிர் மூச்சு. இல்லை யென்றால் ஒற்றுமை என்ற சொல் லிற்கும் இன்பம் என்ற சொல்லிற் கும் எந்த மொழியிலும் இடமிருக் காது.

## காதலின் இயல்பு

காதல் உள, உடல, ஆன்மீக தேவைகளை முழுமையாக்குகிறது. அது என்றும் உயிரோட்டமாக இருந் தால் வாழ்வும் வண்ணமயமாகும. இது கோழையை வீரனாகவும், வீரனைக் கோழையாகவும் மாற்றும் வீரியம் கொண்டது.



காதல் உட்பொருளாக ஏற்று உணரப்படவேண்டியது. சந்தோஷத் தில் அமைதியையும் சோகத்தில் சுகத்தையும் கொடுக்கும் திறன் காதலுக்குமட்டுமே உண்டு.

காதல் என்பது எப்போது எப் படி யாருக்கு யார்மீது வரும் என்று கூற முடியாதது. அது கடவுள் போன்றது. கடவுளை உணர மட் டும் தான் முடியும். உருவம் இல்லை. அதுபோல் காதலுக்கும் உருவ மில்லை. கடவுள் மீது உண்மை யான பக்தி செலுத்தும்போது எப்படி முக்தியின்பம் அடைகின் றோமோ அது போல் உண்மையான காதலை இனம் கண்டு அன்பு செலுத்தும போது அதைவிட இன்பம் வேறில்லை.

காதல் என்பது இன்று நேற்று தோன்றிய ஒனறல்ல. மனித இனம் உலகில் எப்போது தோனறியதோ அபபோதே உருவாகிவிட்டது. ஆதாம் ஏவாள் ஆரம்பித்துவைத்த காதல் இன்று உலகில் வேரூன்றிக் கிளை பரப்பி நிற்கிறது.

## காதலர்தினம்

## பிறந்த கதை

காதல் எனபது இப்போது கணனி மயம் ஆகிவிட்டது. இன்ரநெற்றில் காதல் கொடி கட்டிப் பறக்கின் றது. காதலர் தினத்தை அறிய அதன் வரலாறு காண்போம்.

காதலர் தினம் என்பது ஏதோ இன்று நேற்றுத்தான் கொண்டா டப்படுகின்றது என்று நினைத்து விடாதீர்கள். இயேசுநாதர் பிறந்த 270ஆம் ஆண்டில் இதற்குப் பிள் ளையார் சுழி போடப்பட்டுவிட்டது.

அந்தக காலத்தில் ரோமாபுரியை ஆண்ட மன்னன் இரண்டாம் கிளா டியஸ். இவன் ஒரு வேடிக்கை யான மனிதன். திருமணத்தைப் பற்றி இம் மன்னன் கொண்டிருந்த எண்ணங்கள் மிகவும் விசித்திர மானவை.

போர் வீரர்கள் திருமணம் செயது கொள்வது கிளாடியசுக்கு பிடிக்காத விடயமாக இருந்தது. மனிதர் களைக் கெடுத்துக் குட்டிச்சுவராக் குவதே திருமணம் என்பது இவரது கருத்து. கல்யாணம் செய்து கொள் ளும் போர் வீரர்கள் தம் மனைவி பிள்ளைகளை விட்டுப்பிரிய மனமில் லாது தங்கிவிடுவதை இவர் கட்டோடு வெறுத்தார்.

கிளாடியசின் கொள்கைக்கு நேர் மாறானவர் அந்த மதகுரு. அவர் தான் வலன்டைன் பாதிரியார். அர சனை நேரடியாகப் பகைத்துக கொள் ளாது காதல் ஜோடிகளுக்கு ரகசி யமாகத் திருமணம் செய்து வைத் தார். இதனால் இளைஞர்களும் இளம் பெண்களும் இவரைப் புகழ்ந் துபாடினார்கள்.

பாதிரியார் பலதிருமணங்களை ரகசியமாய் நடத்திவைத்து இளம்

**எஸ்.விக்னேஸ்வரன்**

உள்ளங்களை இணைத்துவைத் தார். இவரைத் தேடிப் போனால் திருமணம் நிச்சயம்.

வலன்டைன் பாதிரியாரின் செயற் பாடு கிளாடியசுக்கு மகா கோபத்தை உண்டாக்கியது. பாதிரியாரை சிறைப பிடிக்க உத்தரவிட்டான். இருப் பினும் அவரை என்ன செய்தாலும் சும்மா இருக்க வைக்க முடியாது எனத் தெரிந்து கொண்ட கிளாடி யஸ் கல்லால் அடித்துக் கொன்று விடவேண்டும் என்று தண்டனை விதித்தான்.

அந்தத் தண்டனை நிறைவேற் றப்பட்ட நாள்தான் பெப்ரவரி 14. காதலுக்காகவும், காதலர்களுக் காகவும் உயிர்த்தியாகம் செய்த வலன்டைன் பாதிரியாரின் இந்த நாள்தான் இன்று காதலர் தின மாகக் கொண்டாடப்படுகின்றது.

காதலித்தவரையே கைப்பிடித்து கணவன் மனைவி இருவரும் ஒரு மித்து வாழ்ந்தால தொடர்ந்து சாத னைகள் பல படைக்கமுடியும்.□

## இதய கீதம்



*இதய விருத்தி,*
*இறுக்கமாய் பிணைத்து*
*ஆழமாய் வேரூன்றி*
*இரத்தத்தில் கலந்து*
*என்றுமே பிரியாதது*
*உண்மைக்காதல்*
*காதல் வாழட்டும்*
*கண்ணியம் பேணட்டும்*
*கற்புடன் காவியம் படைத்து*
*கால மெல்லாம் காசினி போற்றட்டும்*

மீரா அருள்நேசன்

## உவர் நீர்த்தடுப்பு அணைஅமைப்பு

நியாப் திட்டத்தின்கீழ் கரம் பொன் மெலிஞ்சிமுனையில் உவர் நீர்த் தடுப்பு அணையொன்று அமைக் கப்படவுள்ளது.

சுமார் 27இலட்சம் ரூபா செலவில அமைக்கப்படவுள்ள இவ் உவர்நீர்த் தடுப்பு அணை தொடர்பான ஆரம்ப விளக்கக கூட்டம் அணமையில் மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் நடைபெற்றது (தி-75)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

"சலன சித்திரம்" அமைப்பி னால் அமைக்கப்படவிருக்கும் நடன இசைக் குழுவிற்கு விண்ணப்பித் தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி புதன் கிழமை காலை 10.30மணிக்கும்,

சனசமூக நிலையங்களிற்கூடாக இளைஞர், யுவதிகளுக்கு நிரந்தர சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத் திக்கொடுக்கும் வகையில் சலன சித்திரம் அமைப்பு நடத்த இருக் கும் இலவச திரைக்கலை சார் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித் தவர்களிற்கான கலநதுரையாடல் அன்றைய தினம் பி.ப.2.00மணிக்கும் "சலன சித்திரம்" அமைப்பின் யாழ. மாவட்டக் கிளைச் செயலகத்தில் நடைபெறவுள்ளன. (தி)

## தடைநீக்கமும் நேர நீடிப்பும்

(யாழ்ப்பாணம்))

மகாசிவராத்திரி தினத்தை முன் னிட்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்வதற்கான தடைநீக்கமும், நேர நீடிப்பும் இந்து கலாசார அமைச்சினால் அறிவிக் கப்பட்டுள்ளது.

இதற்கமைய உயிலங்குளம் மடுவீதிச் சந்தி, ஓமந்தை ஆகிய இடங்களில் உள்ள தடை முகாம் கள் ஊடாக எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதிவரை இரவு 9.00மணிவரை மக்கள் பய ணம்செய்ய முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது. (தி)

## வீதி விளக்குகளை பொருத்தக் கோரிக்கை

(சுதுமலை)

வலிகாமம் தென்மேற்குப் பகு தியில் உள்ள மானிப்பாய் நகரப் பகுதி, மற்றும் இளவாலை பண் டத்தரிப்புப் பகுதிகளில் இரவு நேர மின் விளக்குகள் பொருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரி சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் அ.சுப்பிரமணிய ஐயர் அவசரகடி தம ஒனறை இலங்கை மின்சார சபைக்கும் மானிப்பாய் பிரதேச சபைக் கும் அனுப்பிவைத்துள்ளார்.

அக் கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளதாவது,

தற்போது வாகன நெரிசல் இரவு வேளைகளில் அதிகமாக உள்ளது எனவும், பல விபத்துக்கள் வீதி களில் ஏற்படுவதற்கு வீதி வெளிச் சம் காரணமாக அமைகிறது என வும் அத்துடன் திருடர்களின்திருட்டு முயற்சிகளுக்கும் இது ஏதுவாகக் காணப்படுவதாக இளவாலை மானிப பாய் பொலிஸார் எனக்கு அறிவித் துள்ளனர்.

இந்நிலையைக் கருத்திற் கொண்டு இதற்கு உடனடி நடவடிக்கை மேற கொள்ள ஆவன செய்யுமாறும் அக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (தி-252)

# பொதுத்தேர்தல் விவகாரத்தில் அமெரிக்கா தலையிடாது

## அமெ. தூதுவர் ஜெப்ரி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொதுத் தேர் தல் விவகாரத்தில் அழுத்தம் கொடுக்கவோ, தலையிடவோ போவ தில்லை என்று அமெரிக்கா கூறி யுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ் ரெடடை ஜனாதிபதியின் ஆலோசகர் அனுரா பண்டாரநாயக்கவை நேற்று முன் தினம் சந்தித்தார்.

இச் சந்திப்புக்குறித்து செய்தி யாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துவெளியிட்ட அவர், இலங்கையில் எந்த அர சாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதை அமெரிக்கா விரும்புகிறது.

இதன் அடிப்படையில் தான் எதிர்வரும் 17ஆம் திகதி இலங் கைக்கு உதவிவழங்கும் மாநாடு திட்டமிட்டபடி அமெரிக்காவில் நடை பெறவுள்ளது.

அத்துடன் தற்போது தென்னி லங்கையில் ஏற்பட்டுள்ள அரசி யல் நெருக்கடி, அதன் விளை வாக பாராளுமன்றக் கலைப்பு, இனப்பிச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக முன்னெடுத்துச் செல் லப்பட்ட பேச்சுவார்த்தைகளின் இடைநிறுத்தம் என்பன தொடர் பாக அமெரிக்கா உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-62)

## திருட்டு முயற்சி முறியடிப்பு

(கொழும்புத்துறை)

கத்தியைக்காட்டி திருட முயன்ற இளைஞர்கள் இருவர், யுவதிகள் மேற்கொண்ட சாமர்த்தியத்தினால் தப்பியோடினர்.

இச்சம்பவம் கனகரட்ணம் வீதி வெட்டுக்குளத்தடியில் இடம் பெற் றுள்ளது.

இதுபற்றித் தெரிய வருவதாவது, தினமும் இவ்வழியால் சென் றுவரும் யுவதிகளை அங்கசேஷ்டை புரிந்து வந்த இளைஞர்களில் சிலர், அன்றைய தினம் கத்தியைக காட்டி நகைகளைக் கழற்றுமாறு யுவதி கள் இருவரை மிரட்டினர்.

ஆனால் யுவதிகள் கூச்சலிட்டுக் குளற அயலவர்களும் இளைஞ்குழுக் களும் வந்ததைக்கண்டு திருடர்கள் இருவரும்திருட்டு முயற்சியைக் கைவிட்டு தப்பியோடியுள்ளனர்.

(தி-57)

## அம்பாறை உள்ளூராட்சி சபைகளின்

# தேர்தலை நிறுத்தக் கோரி நீதிமன்றில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

எதிர்வரும 29ஆம் திகதி நடை பெறவுள்ள அம்பாறை மாவட்ட உளளூராட்சித் தேர்தலை இடை நிறுத்த உதவுமாறு கோரி கொழும்பு உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.கே.சமீர் மற்றும் உள் ளூராட்சித் தேர்தலில் போட்டியிட வுள்ள 4 வாக்காளர்கள் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ள னர்.

அக்கரைப்பற்று, பொத்துவில், சம்மாந்துறை, அட்டாளைச் சேனை, நிந்தவூர் பிரதேச சபைகளுக கும், கல்முனை நகரசபைக்கும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய் வதற கான தேர்தல் நடைபெறவுள்ளது.

அத்துடன் 2002ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின்படி வேட் பாளர் பட்டியல் தீர்மானிக்கப்படுவ தால், சுமார் 15ஆயிரத்துக்கும் அதிகமானோர் இத் தேர்தலில் வாக்களிக்க முடியாதநிலை ஏற் படும் என இம்மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த மனுவில் தேர்தல் ஆணை யாளர் தயானந்த திஸ்ஸநாயக்க உட்பட 4 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (தி-62)

# கடந்த வருடம் 2092 பேர் வாகன விபத்துக்களால் பலி

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த ஆண்டில் மாத்திரம் 35ஆயிரம் வாகன விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன், இதனால் 2ஆயிரத்து 92பேர் பலியாகியுள்ள தாகவும் பொலிஸ் திணைக்களத் தின் மோட்டார் வாகன, நிர்வாக மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரி வின் புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளன.

அத்துடன், நாட்டின் அனைத் துப் பாகங்களையும் உள்ளடக்கி 10 நிமிடங்களுக்கு ஒருமுறை வாகன விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதுடன் இவ் விபத்துக்களால் 4நிமிடத்துக்கு ஒருமுறை ஒருவர் பலியாவதாகவும் தெரியவருகி றது.

இவ்வாகன விபத்துச் சம்பவங் கள் கடந்த 10வருட காலமாக ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 50 ஆயிரம் இடம்பெற்று வந்தன. ஆயினும் கடந்த ஆண்டில் இவ் வாறான விபத்துச் சம்பவங்கள் 35ஆயிரமாகக் குறைவடைந்துள் ளதுடன், நாள் ஒன்றுக்கு 150 வாகன விபத்துச் சம்பவங்களும் இடம் பெறுகின்றதாக அப்புள்ளி விபரங் கள் மேலும் தெரிவிக்கின்றன.

அத்துடன், வாகன ஓட்டுநர்கள் மத்தியில் வீதிப் போக்குவரத்து விதிகள் பற்றிய அறிவின்மை, அவ் வீதிச் சட்டங்களை மதிக் காமை, குடிபோதை போன்ற கார ணங்களினாலேயே அதிகளவு விபத்துச் சம்பவங்கள் கடந்த ஆண் டில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிய வருகிறது.

(தி-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மாஞ்செஸ்டர் யுனைடட் அதிர்ச்சித் தோல்வி

நேற்று முன்தினம் ஓல்ட்டிரா·. பர்ட் மைதானத்தில் நடைபெற்ற பிரிமியர் லீக் கால் பந்து போட்டியில் கடந்தவருட சம்பியன் மாஞ்செஸ்டர் யுனைடட் அணி மிடில்ஸபுரோ அணியிடம் 3-2 என்ற கோல்க் கணக்கில் அதிர்ச்சித் தோலவியைத் தழுவியது. இதனால் முதலிடத்தில் உள்ள ஆர்சனல் அணியைக் காட்டிலும் மாஞ்செஸ்டர் யுனைடட் தற்போது 5 புள்ளிகள் பின்தள்ளியுள்ளது. மேலும் செல்சியா நேற்றுமுன்தினம் போர்ட்ஸ்மௌட் அணியை 2-0 என்று வெற்றிபெற்றதால் புள்ளிகள் நிலைபரத்தில் மாஞ்செஸ்டர் யுனைடட் அணியைவிட ஒரு புள்ளி மட்டுமே குறைவாகப் பெற்று மூன்றாம் இடத்தில் உள்ளது. மாஞ்செஸ்டர் சிட்டி அணியை 2-1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் அணி வென்றது. மைக்கேல்ஓவன் ஒ:ந்டோபர் மாதத்திற்குப் பிறகு முதல் கோலை அடித்தார். இந்த வருடம் பலமான அணியாக விளங்கிவரும் டோட்டன்ஹாமன் கார்ல்டன் அட்லெடிக் அணியை 4-2 என்று தோற்கடித்து அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நியூகாசில் யுனைடட் அணி பிளாக்பர்ன் ரோவர்ஸ் அணியுடன் 1-1 என்று சமன் செய்தது.

(யே)

## தீவிரவாதிகள் அச்சுறுத்தல் இந்திய விஜயம் ரத்தாகலாம்?

இந்திய கிரிக்கெற் அணியின் பாகிஸ்தான் விஜயத்தை ஒத்தி வைக்குமாறு இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபைக்கு மத்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்திய அணியின் தலைவர் சௌரவ் கங்குலி மற்றும் சச்சின் டெண்டுல்கரைக் கடத்தப் போவதாக பாகிஸ்தான் தீவிரவாதிகள் விடுத்த செய்தியை அடுத்தே மத்திய அரசு இதனை அறிவித்துள்ளது. கிரிக்கெற் வீரர்களின் பாதுகாப்புக் காரணமாகவே பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டாம் என மத்திய அரசு கிரிக்கெற் கட்டுப்பாட்டுச சபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பல நாட்களாக இந்திய அணியின் பாகிஸ்தான் விஜயம் தொடர்பில் சர்ச்சைகள் தொடர்ந்து கொணடிருக்கும் நிலையில், தீவிரவாதிகளிடமிருந்து வெளியாகியிருக்கும் இவ்வச்சுறுத்தல் காரணமாகப பாகிஸ்தானுக்கான இந்திய அணியினரின் விஜயம் ஒரு வேளை நிச்சயமாகவே தடைப்பட்டுப் போகலாம் என்று கிரிக்கெற் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (யே-121,61)

## 2003ம் ஆண்டின் சிறந்த ஆஸி. வீரராக ரிக்கிப் பொண்டிங் தெரிவு!

அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கிப் பொண்டிங் கடந்த



2003 ஆம் ஆண்டின் சிறந்த அவுஸதிரேலிய கிரிக்கெட் வீரருக்கான அலன் போர்டர் விருதை வென்றுள்ளார். இந்த விருது கடந்த ஒருவருட காலப்பகுதியில் அவர் வெளிப்படுத்திய ஆற்றலுக்கமையவே வழங்கப்படுகிறது. டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் அவர் தனது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தியமையால் இவ்விருது அவருக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது கடந்த வருடம் டெஸ்ட் போட்டிகளில் 3 இரட்டைச் சதங்களைப் பெற்றதுடன் கடந்த வருடம் நடைபெற்ற உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலிய அணி மூன்றாவது தடவையும் வெல்லக் காரணமாய் அவர் அமைந்தார்.

2003ஆம் ஆண்டின் சிறந்த அவுஸ்திரேலிய வீரருக்கான வாக்கெடுப்பில் ரிக்கி பொண்டிங் 139 வாக்குகளையும் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான மத்தியூ ஹெய்டன் 91 வாக்குகளையும், அணியின் உபதலைவர் அடம் கில்கிறிஸ்ட் 70 வாக்குகளையும் பெற்றார்கள். அடம் கில்கிறிஸ்ட் ஆண்டின் சிறந்த ஒருநாள் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரருக்கான விருதைப் பெற்றார்.

(யே-121)



நேற்று சென்னையில் இங்கிலாந்து 'ஏ' அணியுடன் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் ஆட்டமிழக்காமல் 12பவுண்டரிகள் அடங்கலாக 115 பந்துகளைச் சந்தித்து 105ஓட்டங்களை எடுத்த சென்னை அணியின் தலைவர் ஸ்ரீராம் ரசிகர்களின் பாராட்டை ஏற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

## 19 வயதின்கீழ் உலகக்கிண்ணப் போட்டிகள் டாக்காவில் ஆரம்பமாகிறது

16 நாடுகள் பங்குபற்றும் 19 வயதின் கீழ் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் டாக்கா பங்கபந்து தேசிய அரங்கில் வைபவரீதியாக 10ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் போட்டித் தொடரினை பங்களாதேஷ பிரதமர் யேகம் காலிதா ஸ்யா ஆரம்பித்து வைத்தார். ஆரம்ப நிகழ்வுகளில் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத் தலைவர் சிஹ்சான் மானி, பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட் அத்துடன் 16 நாட்டு வீரர்களும் கலந்து கொண்டனர். ஆரம்ப நிகழ்வு 10ம் திகதி முடிவுற்றது. இவ் உலகக்கிண்ணப் போட்டிகளின் நிமித்தம் பங்களாதேஷ் நகரங்கள் விழாக் கோலம் பூண்டுள்ளது. எதிர்வரும் 15ஆம் திகதி போட்டிகள் யாவும் ஆரம்பமாகவுள்ளன.

19 வயதின் கீழ் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி வெற்றிக் கிண்ணம் பங்களாதேஷின் பிரதான நகரங்களில் அலங்கார ஊர்தியில் எடுத்து வரப்படுகிறது. கிரவுண் ஜீவல்லரி அஸ்பரேயில் வடிவமைக்கப்பட்ட இவ் வெற்றிக் கிண்ணம் 12,000 அமெரிக்க டொலர் பெறுமதி கொண்டது. அத்துடன் 2.5 **Kg** எடையும், 17.25 அங்குல உயரமும் கொண்டதுமான இவ் வெற்றிக் கிண்ணம் வெள்ளியினால் ஆனது. தவிரவும் 54 போட்டிகள் இத்தொடரில் நடைபெறவுள்ளன. 54 போட்டிகளுக்குமான ஆட்டநாயகர்களுக்கு விசேட விருதுகளும் பணப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் பெறுமதியான வெற்றிக் கிண்ணம் ஆட்டத் தொடா நாயகனுககு வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(யே-121,61)

## ஊர்காவற்றுறைப் பிரதேச கப்டிப் போட்டி முடிவுகள்

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் ஊர்காவற்றுறைப்பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் நேற்று முன்தினம் ஆண், பெண்இருபாலாருக்குமான கபடிப் போட்டிகள் ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகமும், பெண்களுக்கான இறுதிப்போட்டியில் ஊர்காவற்றுறை சென்ஜேம்ஸ் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்று சம்பியன்களாக வந்துள்ளன.

ஆண்களுக்கிடையிலான கபடி இறுதிப்போட்டியில் காந்திஜி விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய சென்ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்தை 31:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெறறு சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டனர். ஆண்களுக்கான இவ் இறுதிப்போட்டியில் தம்பாட்டி காநதிஜி விளையாட்டுக்கழகத்தைச சேர்ந்த வி.விமல்ராஜ் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச மட்டத்தில பெண்களுக்கிடையில் முதன் முதலாக இவ்வாண்டு நடாத்தப்பட்டிருந்த இக் கபடி இறுதிப்போட்டியில் ஊர்காவற்றுறை சென்ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம அதனை எதிர்த்து விளையாடிய நாரந்தனை அணணா விளையாட்டுக்கழகத்தை 40:20என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டனர். (யே-68)

## இந்தியாவுக்கு தங்கங்கள்

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் 10வது ஆசிய துப்பாக்கி சுடும் சம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது. இதன் மூலம் 4 துப்பாக்கி சுடும் இந்திய வீரர்கள் ஏதென்சில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றவுள்ளனர்.

பீராப்பனப் போட்டியில் முதலாவது தங்கப்பதக்கத்தை மணி சத்சில் பெற்றார். ரஙநாத் பண்டித் இரண்டாவது தங்கத்தை வென்றார். இவர்கள் தங்கம் வென்றதன் மூலம் ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றவுள்ளனர். மகளிர் பிரிவில் திபாலிதேஸ பாண்டி உட்பட மற்ற வீரர்களும் ஒலிம்பிக்கில் தகுதி பெறும் வாய்ப்பைப் பெற்றனர்.

(யே-121)

## இந்திய அணி வெற்றிவாகை

சென்னையில் நடைபெற்ற இந்திய 'ஏ' அணிக்கும், இங்கிலாந்து 'ஏ' அணிக்குமிடையிலான மூன்றாவதும இறுதியுமான ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் இந்திய 'ஏ' அணி 5விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றது. நாணய சூழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 'ஏ' அணி 42.1 ஓவர்களில் 210 ஓட்டங்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய 'ஏ' அணி 45.1 ஓவரில் 5விக்கெற்றுக்களை இழந்து 213 ஓட்டங்கள் பெற்று 5 விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றது. (யே-121)

## ஊர்காவற்றுறைப் பிரதேச எல்லேப் போட்டிகள் நாளை

வடக்குக் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வரும் ஊர்காவற்றுறைப் பிரதேச மட்ட விளையாட்டுபோட்டி நிகழ்வுகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் ஆண்கள் பெண்கள் இரு பாலாருக்குமான எல்லேப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

நாளை காலை 9.00மணி முதல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பித்த விளையாட்டுக் கழகங்களை அன்றைய தினம் குறித்த நேரத்திற்கு முன்னா வருகை தந்து போட்டிகளில் கலந்து கொளளும் வாய்ப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு ஜே. எக்ஸ். செல்வநாயகம் அவர்கள் கேட்டுக்கொணடுள்ளார்.

(யே-68)

## கிரிக்கெற் விளையாட்டுக்கு மலேஷியாவும் தயாராகிறது

மலேஷியாவில் கிரிக்கெற் ஆட்டத்தினை பிரபல்யப்படுத்தும் நோக்கில் மலேஷிய வெற்றிக் கிண்ண ஒருநாள் போட்டித் தொடரை நடாத்த அந்நாட்டு கிரிக்கெற்சபை தீர்மானித்துள்ளது. மலேஷிய கிரிக்கெற் சம்மேளனம் முதற்தடவையாக ஏற்பாடு செய்துள்ள இவ் அறிமுகப் போட்டியில் இலஙகை பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மார்ச் மாதத்தில் இப் போட்டிகளை நடாத்த மலேஷிய கிரிக்கெற்சபை தீர்மானித்துள்ளது. மே 27,29,30 ஆகிய தினங்களில் இடம்பெறவுள்ள இப் போட்டிகளுக்கு இரு நாடுகளும் விருப்பம் தெரிவித்துள்ளன.

இப் போட்டியில் பங்குபற்றுவதற்கு இலங்கையை அழைத்தமைக்காக இலங்கை கிரிக்கெற் சபை, மலேஷிய கிரிக்கெற் சம்மேளனத் தலைவர் துர்கு அம்ரான் இப்னு ஜப்பாருக்கு நன்றி தெரிவித்ததுடன் இம் முடிவினை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அறிவித்தது. மலேஷிய இளைஞர் கிரிக்கெற் பயிற்சித் திட்டத்துக்கு ஒத்துழைபபதாகவும், மலேஷிய இளம் கிரிக்கெற் வீரர்களுக்கு இலங்கையிடம் பயிற்சியினை பெற்றுக் கொடுக்குமென கிரிக்கெட் பிரமுக ரொருவர் தெரிவித்தார்.

(யே-121)

## ஹென்றியின் 100வது கோல் ஆர்சனல் தொடர்ந்து வெற்றி

சௌத்தாம்டன் அணிக்கு எதிராக நேற்று லண்டன், ஹைபரி மைதானத்தில் நடைபெற்ற இங்கிலீஷ் பிரிமியர் லீக் கால்பந்துப் போட்டியில் ஆர்சனல் வீரர் தியரி ஹென்றி அடித்த 100 மற்றும் 101வது கோல்களால் சௌத்தாம்படன் அணியை 2:0என்று வீழ்த்தினார்.

இந்த வெற்றிமூலம் ஆர்சனல் இதுவரை 25போட்டிகளில் தொடர்ந்து தோலவியை சந்திக்காமல் சாதனை புரிந்துள்ளது. இன்று மஞ்சஸ்ரர் யுனைட்டட் அடுத்த போட்டியை விளையாட வேண்டிய சூழ்நிலையில் ஆர்சனல் அணி அந்த அணியைக் காட்டிலும் 5புள்ளிகள்கூடுதலாகப் பெற்றுள்ளது.

எலலான்ட் சாலை மைதானத்தில் லீஸ் யுனைட்டட், உல்வ்ஸ் அணியை 4:1என்ற கோல்களில் நசுக்கியது.

பால்டன் வான் டரர்ஸ் அணியுடன் 1:1என்று லீசெஸ்டர் அணி சமன செய்ததால் வீழ்ச்சிப் பாதையில் செல்கிறது லீசெஸ்டர்.

புள்ளிகளின் நிலைவரம்இதுவரை,

ஆர்சனல் 25போட்டிகள் 18 வெற்றி 61புள்ளிகள்.

மாஞசஸ்ரர் யுனைட்டட்-24 போடடிகள்-18 வெற்றி-56புள்ளிகள்.

செல்சியா-24போட்டிகள்-16வெற்றி 52புள்ளிகள்.

நியுகாசில்-24போட்டிகள்-9 வெற்றி-37புள்ளிகள்.

கார்ல்டன் அட்லெடிக்-24போட்டிகள் 10வெற்றி 37புள்ளிகள்.(யே)

## அகாசி, வின்ஸ்பாடிய ஏ.டி.பி. டென்னிஸ் இரண்டாவது சுற்றில்

3இலட்சத்து 80ஆயிரம் டெலர் பரிசிற்குரிய சான்ஜோஸ் ஏ.டி.பி. டென்னிஸ் தொடர் முதல் சுற்று ஆடவர் ஒற்றையர் போட்டியில் அகாசி மற்றும் சக வீரர் வின்ஸ் ஸ்பாடியா ஆகியோர் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

அகாசி இராக்லீ, லபாட்சே என்பவரை 7:6(7:4), 6:4என்றும், சக அமெரிக்க வீரர் ஸ்பாடியா, ஜேர்மனிய வீரர் [illegible] என்பவரை 6:4,6:2 என்றும் வீழ்த்தினார். இரண்டாவது சுற்றில் தென்னாபிரிக்க வீரர் வெஸ்வி மூடியை அகாசி சந்திக்கவுள்ளார்.

3வது தரவரிசை மார்டி·.பிஷ், அலெக்ஸ்ரெய்ச்சல் என்பவரை 6:4,6:1 என்றும் ரர்பிஜின் இப்பரிடென் மார்க் வீரர் கென்ன்ட் கார்ல்சனை 6:3,4:6,6:3 என்ற செற்களிலும் தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றார்.

(யே-68,61)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)

## நிதி-ஆசிய அபிவிருத்தி வங்கி ஆஅவ கடன் இல:- 1846-சிறீ (எஸ்எவ்)

## திருகோணமலை மாவட்ட நிருமாண வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல் - இல.06

1. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிருமாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும், NECORD திட்டத்தின், திட்டப்பணிப்பாளர் சார்பாகத் திருகோணமலை மாவட்ட கேள்விச்சபையின் தலைவரால் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வித்தாரர்களிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

## அட்டவணை

| தொ. இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTADபதிவு | கேள்விப்பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. | TC/NECORD/ED/30 | எந்தப்பெண்டிவேவ சிங்கள வித்தியாலயத்தில் 100'x25'பாடசாலையின் கட்டட நிருமாணம், பாடசாலைக் கட்டடத் திருத்தவேலை, மலகூடத்தின் திருத்தவேலை ஆகியவற்றுக்கான நிருமாணம். | M7 | 23,000 |
| 02. | TC/NECORD/ED/31 | மகாடிபுல்வேவ வித்தியாலயத்தின் 40'x20' விஞ்ஞான ஆய்வுகூடத்தின் நிருமாணம். | M9 | 9,000 |
| 03. | TC/NECORD/ED/32 | கிங்கபுர வித்தியாலயத்தின் 40'x20' விஞ்ஞான ஆய்வுகூடத்தின் நிருமாணம். | M9 | 9,000 |
| 04. | TC/NECORD/HS/05 | திருகோணமலை, சேருவிலவில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு அலகுத் தொகுதியுடன், வைத்திய அதிகாரியின் விடுதி நிருமாணம். | M6 | 72,000 |
| 05. | TC/NECORD/HS/24 | திருகோணமலை, கும்புறுபிட்டியில், மத்திய மருந்தகம் மற்றும் கிராமிய வைத்திய அதிகாரியின் விடுதி நிருமாணம். | M6 | 59,000 |
| 06. | TC/NECORD/AG/06 | திருகோணமலை, குச்சவெளியில் விவசாயப் போதனாசிரியர் அலுவலகம் மற்றும் விடுதி மீள் நிர்மாணம். | M7 | 21,000 |
| 07. | TC/NECORD/RD/05 | திருகோணமலை முள்ளிப்பொத்தானை கிஜ்ரா வீதியில் இணைபாலத்தின் நிர்மாணம். | M7 | 25,000 |
| 08. | TC/NECORD/RD/06 | திருகோணமலை எத்தப்பெண்டிவேவவின் பிரதான வடிகால் அமைப்பின் பாலம் மீள் புனரமைப்பு. | M8 | 18,000 |
| 09. | TC/NECORD/RD/07 | திருகோணமலை கோமறங்கடவெலவில்இருந்து ரன்டிரிய உல்பத்து வரையான வீதி மேம்படுத்தல். | M9 | 9,000 |
| 10. | TC/NECORD/JR/03 | திருகோணமலை மயிலவெவ நீர்த்தாங்கி மற்றும் வடிகால் அமைப்பு புனரமைப்பு. | M7 | 26,000 |

3) பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்விகள் கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிருமாணப் பயிற்சி/ அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரம் ஒன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (இக்டாட்டுடன் M7க்கு மேலாக பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) விளங்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த 5 வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான செயற்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடம் இருந்தோ அல்லது உசாவலர்களிடம் இருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. 'இக்டாட்' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. ஒப்பந்தகாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ்விளங்கக்கூடாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

4. இதன் தொடர்பாக பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 1அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி சமர்ப்பிக்க முடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கேள்வியாக அமையவேண்டும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை (NECORD) கருத்திட்டத்தின் கீழ் மூன்றாக விளங்கும். தற்போது கேள்வி முடிவுத்திகதியன்று செயற்படுத்தப்படும் வேலைகளும் இதில் உள்ளடக்கப்படும்.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், வடக்குக் கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) கச்சேரி, திருகோணமலை என்ற விலாசத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி:- 026-2227503, பக்ஸ்:- 026-2227502, ஈ-மெயில்:- necordtc@sltnet.lk)
6. கேள்வி ஆவணங்களை 2004பெப்ரவரி 16இல் இருந்து 2004 மார்ச் 1வரை காலை 9.30லிருந்து பி.ப. 3.00 மணிவரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்தில் இருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000/-ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நீகோட் மாவட்டச் செயற்றிட்ட அலுவலகம், கச்சேரி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு மார்ச் 5ஆம் திகதி அன்று காலை 10மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
8. முன்கூட்டியே கேள்விகோரல் பற்றிய கூட்டம் ஒன்று இதன் தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் 2004 பெப்ரவரி 27ஆம் திகதி அன்று காலை 10மணிக்கு நடைபெறும்.
9. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வியிடுவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 7இல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவினங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

எம்.டி.ஏ.ஜி.றொட்றிகோ,
அரசஅதிபர்/தலைவர், மாவட்ட கேள்விச்சபை,
NECORD கருத்திட்டம்,
திருகோணமலை.

(C/7269)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# இசை மருத்துவம்

மனம் சரியில்லாவிட்டால் உடனே சிலர் சங்கீதம் கேட்க ஆரம்பித்து விடுவது வழக்கம். மனதை சரிசெய்வதற்கு அது ஒரு நல்ல வைத்தியம் தான். ஏனென்றால் இன்று மன நோயாளிகளுக்கே சங்கீதத்தை ஒரு வைத்தியமாக உபயோகப்படுத்துகின்றனர்.

மனநோய்க்கு எத்தனையோ விதமான சிகிச்சைமுறைகள் உண்டு. Psychotherapy என்று ஒருவகை. இது மனோதத்துவ சிகிச்சை Hyphotherapy என ஒன்று. இது மனோவசிய சிகிச்சை Recreation Therapy என ஒன்று. இது மனமகிழ்ச்சிகிச்சை. இசை தவிர அதிகப்படியான உணர்ச்சிகளுக்கு யோகசிகிச்சை உபயோகப்படுகின்றது. இவையெல்லாவற்றையும் விட சிறந்த பலனைக் கொடுக்கக் கூடிய ஒரு சிகிச்சைமுறை Music Therapy இசை சிகிச்சை.

இசையினால் நோய்கள் குணமாகும் என்பது பழங்காலத்திலிருந்தே இருந்து வரும் நம்பிக்கை அது மட்டுமல்ல எந்த ரகம் என்ன நோயைக் குணப்படுத்தும் என்றும் கூறுகின்றனர். இவற்றுக்கெல்லாம் தெளிவான விஞ்ஞான நிரூபணம் இல்லாவிட்டாலும் கூட இன்னும் ஆராய்ச்சியில் உள்ளன.

இதுபற்றி மேற்கொண்டு ஆராய்ச்சி செய்து நிறையக கண்டுபிடிக்கலாம் அவற்றைச் சிறப்பாக உபயோகப் படுத்தலாம்.

இந்தோளம் என்கின்ற ராகம் வாதநோய்க்கு நல்லதாம. சாரங்கா ராகம் பித்தம் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு நல்லது. பைரவிராகம் ஆஸ்துமாவுக்கும் சுவாசநோய்களுக்கும் நல்லதாம். அசாவேரி ராகம் தலைவலியைக குணப்படுத்துமாம்.

நீலாம்பரி இருக்கின்றதல்லவா? அது உடல் இறுக்கத்தையும் மன இறுக்கத்தையும் போக்கி தூக்கத்தில ஆழ்த்தக் கூடிய ராகம்! பிலகரி, பூபாளம் நாட்டை போன்றன நம்மைத் தூக்கத்திலிருந்து கண் விழிக்கச செய்யக் கூடிய ராகங்கள். கவலை, பசி இரண்டையும் மறக்க வேண்டுமா? அதற்கு கரகரப்பிரியா இராகம் சோக உணர்வைத் தரக்கூடிய ராகங்கள் முகாரி, சிவரஞ்சனி, ரேவதி.

அதிர்ச்சி, பாதிப்பு, பரபரப்பு இவற்றைப் போக்கிமன அமைதியைத் தரக்கூடிய ராகங்கள் மத்யமாவதி சகானா.

இசை இருக்கின்றதே இது கேட்பவர்களுக்கு மட்டும் தான் நன்மை செய்கின்றது என்றில்லை அதைப் பாடுபவர்களுக்கும் பயிற்சி செய்பவர்களுக்கும் கூட நன்மை செய்கின்றது. பாடுபவர்களுக்கு ரத்த ஓட்டம் சீரடையும், முகத்தில் புதுக்களை உண்டாகும், தோலின் சுருக்கங்கள் நீங்கும், இளமையான தோற்றப் பொலிவு உண்டாகும் அதனால் தான் சங்கீத வித்வான்கள் பார்ப்பதற்கு நன்றாக இருப்பார்கள். பாடும் போதுதான் ஒரு மாதிரி இருக்கும்.

இசையை '' சங்கீதயோகம்'' என்று கூறுவார்கள் ஏனென்றால் யோகப் பயிற்சிக்கும் இதற்கும் சம்பந்தம் உணடு. ராக ஆலாபனை செய்யும் போது உள்ளே இழுக்கும் மூச்சு அங்கேயே கொஞ்சநேரம் இருக்கும். அதன் பின் தான் வெளியே வரும் அது பிரணாயாமம் போன்றது.

ஆரோகணம் அவரோகணம் செய்யும் போது மூச்சு இழுத்து படிப்படியாக வெளியே விடவேண்டியிருக்கின்றதல்லவா? இதெல்லாம் யோகப் பயிற்சி மாதிரிதான். இதைத்தவிர இசைக்கருவிகள் பற்றியும் கூறுகின்றனர். வீணையின் நாதம் ரத்தக் கொதிப்புக்கு நல்லதாம். அதிகப்படியான ரத்த அழுத்தத்தைக் குறைத்து மனதுக்கு அமைதியைக் கொடுக்கும்.

புல்லாங்குழல், நாதஸ்வரம் போன்றன கவலையால் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்தி மனதில் மகிழ்ச்சியைப் பெருக்குமாம். மிருதங்கம் மாதிரியான தாளவாத்தியங்கள் மனத்தளர்ச்சி, மனச்சிதைவு போன்றவற்றைக் குறைத்து மறதியைப் போக்கி ஞாபக சக்தியைப் பெருக்குமாம். இப்படி அனேக விஷயங்கள் உண்டு. அதனால் இதைப்பற்றி நிறைய ஆராய்ந்தால துல்லியமாக விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தத் தகவலை எனது நண்பன் ஒருவரிடம் கூறிக் கொண்டிருந்தேன் அவனுக்குச் சங்கீதம் என்றால் என்னவென்றே தெரியாது. அவன் ஒருநாள் அவசரமாக என்னைத் தேடிவந்தான்! "சார்!. வீணை இசை ரத்தக் கொதிப்பைக் குறைக்கும் என்று கூறினீர்கள் ஆனால எங்கள் பக்கத்து வீட்டில் ஒரு வீணை வித்வான் உள்ளார். நேற்று அவருக்கே ரத்தக் கொதிப்பு திடீரென்று ஏறி விட்டது தெரியுமா?" என்றான். எனக்கு ஆச்சரியமாக இருந்தது."நேற்று அவரது வீட்டில் என்ன நடந்தது? அவா வீணை வாசித்தாரா?" என் று கேட்டேன். ''இல்லை சார்... அவரது வீணையை எடுத்து நான் வாசித்தேன்'' என்கிறான் இவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அமை. மிலிந்தவின் பதவி நீக்கம் உரியமுறையில் அறிவிக்கவில்லை

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அமைச்சர் பதவியிலிருந்து மிலிந்தமொறகொட இராஜினாமாச் செய்வது குறித்து கடிதம்



மூலம் தனக்கு நேரடியாக அறிவிக்க வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவுறுத்தல்களை அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கு வழங்குமாறும் அவர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு அறிவித்துள்ளார்.

அமைச்சர் ஒருவர் தனது இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பிப்பதானால், அரசியல் யாப்பின் 47 ஆவது ''ஆ'' உரித்துரையின் பிரகாரம் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

தனது பதவியிலிருந்து நீங்குவதாக அறிவித்து



அமைச்சர் மிலிந்த மொறகொட கடந்த 11ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார். ஆனால பிரதமர் இக் கடிதத்தின் பிரதி ஒன்றையும், இது குறித்த தனது கடிதத்தையும் நேற்று முன்தினம ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தார்.

அமைச்சர் ஒருவர் தனது பதவியில் இருந்து நீங்குவதென்றால், ஜனாதிபதிக்கே முதலில் அறிவிக்க வேண்டுமென்றும், அவ்வாறான கடிதமொன்று ஜனாதிபதிக்கு கிடைக்கும் பட்சத்தில், அவரது கடமைகள் நிதி அமைச்சரிடம் கையளிக்கப் படும் எனவும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-62)

# அமைச்சர்களின் பதவி நீக்கம் அபிவிருத்தியைப் பாதிக்காது

## பிரதமரின் கடிதத்துக்கு ஜனாதிபதி செயலகம் மறுப்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை பாதிக்கும் வகையில் வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்தியின் குடியேற்றம் ஆகியவற்றுக்குப் பொறுப்பான அமைச்சர்களான ஜயலத் ஜெயவர்த்தன, நூர்தீன் மசூர் மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகிய மூன்று அமைசர்களை பதவி நீக்கம் செய்தமை தவறான செயலென பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அனுப்பிவைத்துள்ள கடிதம் தொடர்பான குற்றச்சாட்டை ஜனாதிபதி செயலகம் முற்றாக நிராகரித்துள்ளது.

இக் கடிதம் தொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடி தோன்றிய போதே சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப் பட்டன.

ஜனாதிபதி கடந்த நவம்பர் மாதம் 4 ஆம் திகதி மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதாலோ, பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாலோ, போர் நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகப்போவதில்லை என தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்திருந்தனர். புலிகளின் இவ்வறிவிப்புக்கும், பிரதமரின் கடிதத்திற்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் உள்ள மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி முன் வந்தார். இதனை விடுதலைப்புலிகள் நிராகரித்து விட்டனர்.

அமைச்சரவை அந்தஸ்துப் பெறாத அமைச்சர்களையும், பிரதி அமைச்சர்களையும் ஜனாதிபதி பதவிநீக்கம் செய்தமையால் வடக்கு-கிழக்குப் பகுதியின் அபிவிருத்திகள் என்ற வகையிலும் தாமதம் அடையாது எனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தி-61)

## இராசிபலன்

14. 02. 2004
(மாசி 02, சனிக்கிழமை)

| | |
|---|---|
| நவமி | பின்னிரவு 3.52 மணிவரை |
| அனுஷம் | முன்னிரவு 9.57 மணிவரை |
| இராகுகாலம் | 9.33-12.03 மணிவரை |
| சுபநேரம் | 3.33-5.03 மணிவரை |

**மேடம்**
அமைதிக்குறைவு, நண்பர்கள் மனஸ்தாபம், உடல் நலக்குறைவு, போஷன சுகம்.

**இடபம்**
போஷன சுகம், குடும்பநலம், பிரயாண நன்மை, முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
நல்ல முயற்சி, விருந்துபசாரம், பிரயாணம், சத்துரு ஜெயம்.

**கடகம்**
தொழிலில் ஆர்வம், குடும்பக்கவலை, உடல் நலக்குறைவு, அபகீர்த்தி.

**சிங்கம**
ரோக பயம், வீண்பிரயாசை, உறவினர் சந்திப்பு, புதிய முயற்சி.

**கன்னி**
கூட்டு முயற்சி, அன்னியர் சந்திப்பு, போஷன நன்மை, கௌரவமான நிலை.

**துலாம்**
விதண்டாவாதம், திடீர் நன்மை, பண விரயம், சயனசுகக் குறைவு.

**விருச்சிகம்**
பெரியோர் ஆதரவு, புதிய திட்டமிடல், தொழில் விருத்தி, போஷன சுகம்.

**தனுசு**
நல்ல முயற்சி, பிரயாண அலைச்சல், சுப செலவு, சகோதரர்வழி நன்மை.

**மகரம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, விருந்துபசாரம், சயன சுகம்.

**கும்பம்**
தனவரவு, கீர்த்தி, தூரதேசச் செய்தி, காரிய அனுகூலம்.

**மீனம்**
புதிய திட்டமிடல், சரீரப் பிரயாசை, தேசாந்திர வாசம், பிதா சிந்தை.

(வாக்கிய பஞ்சாங்கப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# தேவாலயங்களைத் தாக்கிய குழு பொலிஸாரிடம் அகப்பட்டது

(கொழும்பு)

30 கிறிஸ்தவ தேவாலயங்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அவுஸ்திரேலியாவிலிருந்து அண்மையில் நாடு திரும்பிய முன்னாள் ரயில்வே பகுதி பொறியியலாளர் ஒருவர் தலைமையில் இயங்கும் 12 பேர் கொண்ட குழுவொன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர். நீர்கொழும்பு, நுகேகொடை, எம்பிலிபிட்டிய, அவிசாவளை, ஹோமாகம, பன்னல, ஹெட்டிபொல, கிருலப்பன, மகரகம போன்ற இடங்களிலுள்ள தேவாலயங்களும் கிறிஸ்தவ அமைப்புக்களுமே அண்மையில் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டிருந்தன.

ஹோமாகமவிலிருந்து செயற்படும் மேற்படி குழு, வான் ஒன்றில் கெப்பிட்டிகொலாவிற்கு சென்று அங்கு சனசமூக நிலையமொன்றை தாக்கி அளித்த போது பொலிஸாரிடம் அகப்பட்டது. ''வேர்ள்ட் விஷன்'' நிறுவன ஆதரவில் இயங்கி வந்த சனசமூக நிலையத்தை தாக்கிவிட்டு ஹோமாகமவிற்குத் திரும்பிய போது பொலிஸார் கலைத்துச் சென்று இக் குழுவினரைப் பிடித்துள்ளனர்.

இக்குழுவினரே தேவாலயங்கள் பலவற்றைத் தாக்கித் சேதப்படுத்தி வந்தது என்பது ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. இக்குழுவின் தலைவர் ஹோமாகம தேவாலயத் தாக்குதலின் பின் அகப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.(தி-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினிபஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் மனோ நலம் பரிசீலிக்கப்பட வேண்டும்

## வலம்புரி பேட்டியில் பொதுமக்கள் கருத்து

பொதுவாக யாழ்ப்பாணத்தில் நாளுக்குநாள் வீதி விபத்துக்கள் அதிகரித்தவண்ணமே இருக்கின்றன. மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்கள் ஒருபுறம் சனத்தொகைக் குறைப்புச் செய்துகொண்டுவர மினிபஸ்காரர்களோ தனியார் போக்குவரத்துச் சேவை இலங்கையில் ஆரம்பிககப்பட்ட காலத்தில் இருந்து இன்றுவரை விபத்துக்களில்

**விபத்து நடந்த இடத்திலிருந்து சாரதிகள் உடனே தலைமறைவாகி விடுகிறார்கள். அப்பொழுதுதான் அவர்களுக்குத் தங்கள் தவறின் தாற்பரியம் புரிகிறது போல!**



முடிசூடா மன்னர்கள் தாங்கள் தான் என்று கிழமைக்கொருதடவையாவது நினைவுபடுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

கௌரவமான பழக்கவழக்கங்களின் சாயலே புரியாத பெரும்பாலான மினிபஸ் நடத்துநர்கள்,

**தரக்குறைவான மினிபஸ் கலாசாரம் ஒன்று இங்குள்ளது. பொது அமைப்புக்கள் இது தொடர்பில் அதீத கவனம் செலுத்தவேண்டும்.**

பயணிகளை மிகவும் தரக்குறைவாக நடத்துவதுமட்டுமல்லாது அளவுக்கதிகமான பயணிகளை அள்ளியடைந்துகொண்டு தலைகால் தெரியாத வேகத்தில் ஒருவரோடு ஒருவர் போட்டிபோட்டு சவாரிசெய்து பயணிகளின் வாழ்வையே முடித்துவைக்கிறார்கள்.

**பேட்டி: பேதுரு யேசுதாசன்**
**படங்கள்: ஐங்கரன்**

இவர்களின் மனநலம் குறித்து பொலிஸாரும் ஏனைய அதிகாரிகளும் அக்கறையெடுத்துக்கொள்வது மிகவும் அவசியமானது என்று அனேகமானவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். ஒரு விபத்துநடந்து முடிவுகள் பாரதூரமாக இருக்கும் பட்சத்தில் விபத்து நடந்த இடத்தில் இருந்து சாரதிகள் உடனே தலைமறைவாகி விடுகிறார்கள். அப்பொழுதுதான் அவர்களுக்குத் தங்கள் தவறின் தாற்பரியம் புரிகிறது போல. நேற்று முன்தினம் கைதடியில் இடம்பெற்ற கோர பஸ் விபத்துச் சம்பவத்தில் ஒருவர் பலியுண்டதோடு 30 க்கும் அதிகமானவர்கள் காயமுற்றனர். இது தொடர்பில் "வலம்புரி" காயமுற்றவர்களிடமும் பொதுமக்களிடமும் விசேட பேட்டியொன்றையெடுத்தது. அதன்விபரம் வருமாறு:-

இவ்விபத்தில் காயமுற்று யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் கோப்பாய் வாசியொருவர்:- ''மழைபெய்துகொண்டிருந்தது. சாரதி அதிவேகமாக பஸ்வண்டியைச் செலுத்திக்கொண்டு வந்தார். வழமையாக இரண்டு பஸ்கள் தான் தூரத்துப் படேக்கை உப்பிடியோடி வாறவன் ஆனால் ஏன் உந்த மழையில உப்பிடியோடுறானென்று பக்கத்தில இருந்தவரைக் கேட்டன்.அதே நேரம் பஸ் பெரிய சத்தத்தோட எதிலையோ மோதினது.பிறகு என்னநடந்ததென்று எனக்குத் தெரியாது தம்பி" என்றார்.

இன்னுமொரு காயமுற்ற பெண்மணி கருத்துக் கூறுகையில் ஆண்களும், பெண்களும், சின்னப்பிள்ளைகளும் நிரம்பிவழிந்த அந்த பஸ்ஸிலை, பயணிகளைப் பற்றிய எவ்விதமான அக்கறையும் இல்லாமல், மனம்போன போக்கில ஓடிவந்தார் வாகனச் சாரதி. குறுகிய நேரத்திற்குள் கூடிய பணத்தைச் சேகரிப்பது ஒன்றே இவங்கட நோக்கம்தம்பி. இல்லையெண்டால் இப்பிடி நடந்திருக்குமோ என்று அங்கலாய்த்தார்!



**அடிப்படைப் பழக்கவழக்கங்களே தெரியாதவங்களுக்கு அடையாள அட்டை வழங்குகிறதுக்கும் பயணிகள் கட்டண அதிகரிப்புக் கோரி வேலைநிறுத்தம் செய்யிறதுக்கு மட்டும்தான் தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் இருக்கிறாரோ?**

காயமுற்ற தனது உறவினரைப் பார்வையிடவந்த ஒருஅரச அதிகாரி கருத்துத்தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் பணம் இப்பொழுது வெளிநாடுகளில் இருந்து அளவுக்கு அதிகமாகவே புளங்குகிறது. அதனால் அதனைப் பாவிப்பவர்களுக்கும் சரி அதனைத் துரிதகதியில் தேட முற்படுபவர்களுக்கும் சரி மனிதப் பெறுமானங்களை மதிக்கத் தெரிவதில்லை என்பது ஒரு கசப்பான உண்மை. இந்த நிலைகளுக்கும் அதுதான் காரணம் என்றார்.

**இப்ப யாழ்ப்பாணத்தில சி.ரி.பி. காரங்கள் ஓரளவு பரவாயில்லை.**

ஒரு வைத்திய அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், தனியார் பஸ் நடத்துநர்கள் மற்றும் சாரதிகளின் மனநலம் தீவிரமாகப் பரிசோதனைக்குட்படுத்தப்படவேண்டியது. இது தொடர்பில் பொலிஸார் அதீத அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுமக்களைப் பற்றிய எவ்வித அக்கறையும் இல்லாது உயிர்களின் பெறுமானம் பற்றிய உணர்வில்லாத ஒருவர் ஒரு வாகனத்தின் சாரதி ஆசனத்தில் அமர்வது என்பது எவ்வளவு பாரதூரமான விடயம் என்பதுபற்றிப் பொலிஸாரும் பொது அமைப்புக்களும் அதீத கவனம் செலுத்தவேண்டும். தரக்குறைவான மினிபஸ் கலாசாரம் ஒன்று இங்கு இருக்கின்றது. பொது அமைப்புக்கள் இது தொடர்பில் அதீத கவனம் செலுத்தவேண் டும். மனித தராதரம் அறியாமல் பயணிகள் அனைவரையும் ஆடுமாடுகள் போல ஒரு நடத்துநரால் நடத்த முடிகிறது என்றால், அவருடைய மனநலம் கேள்விக்குரிய [illegible] முடித்தார் அந்த வைத்திய அதிகாரி.

இன்னுமொருவர் கருத்துக் கூறுகையில், மினிபஸ் நடத்துநர்கள் சிலர் அவர்களது சங்கத் தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை வைத்திருப்பதை நான் பார்த்திருக்கிறேன் தம்பி. ஆனால், எந்த அடிப்படையில் இவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குகிறார்களோ தெரியாது. அடிப்படைப் பழக்கவழக்கங்களே தெரியாதவங்களுக்கு அடையாள அட்டை வழங்கிறதுக்கும், பயணிகள் கட்டண அதிகரிப்புக்கோரி வேலைநிறுத்தம் செய்யிறதுக்கு மட்டும்தான் தனியார் மினிபஸ் சங்கத்தின் தலைவர் இருக்கிறாரோ என்று கேள்வி எழுப்பிய அவர், சி.ரி.பி. கலாசாரம் என்று ஒன்று இருந்தது தம்பி, பொதுமக்கள் மேல 'வள்' எண்டு பாய்வினம். ஆனால் இப்ப யாழ்ப்பாணத்தில சி.ரி.பிக்காரங்கள் ஓரளவு பரவாயில்லைத் தம்பி.

இந்த மினிபஸ்காரங்கள் தான் படுமோசம் என்றார் அவர்.

பொதுமக்களின் இந்தக் கருத்துக்களுக்குமப்பால் பொலிஸாரின் நடவடிக்கைகள் பற்றி மக்கள் சிந்திக்கவேண்டியுள்ளது. சாதாரணமாக ஒரு பஸ்வண்டியில் எவ்வளவு பயணிகள் பயணிக்கவேண்டும், குறிப்பிட்ட பாதையில் என்ன வேகத்தில் செல்லவேண்டும் என்பது பற்றிய பிரமாணங்கள் இருக்கின்ற போதிலும், மிதிபலகைப் பிரயாணிகளைக் கண்டால் மட்டுமே பொலிஸார் நடவடிக்கை எடுக்கின்றனர். தவிரவும் முகமாலை போன்ற அதிகளவிலான பஸ்கள் செல்லும் பாதைகளில் பிரயாணிகள் மினிபஸ் நடத்துநர்களால் மிகக் கீழ்த்தரமான முறையில் அவமதிக்கப்படுகிறார்கள். அவர்களது உயிருக்கு உத்தரவாதமில்லாத வேகத்தில் பஸ்கள் பயணிக்கின்றன. பொலிஸார் இதுகுறித்து அதீத கவனமெடுக்கவேண்டும். அது மட்டுமல்லாது கண்டிவீதியில் வாகனரோந்துக் கண்காணிப்பை அதிகமாக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றார்கள்.



இவ்வீதிவிபத்துக்கள் தொடர்பாக உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் வ.பத்மநாதனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது,

நேற்று முன்தினம் கைதடி நுணாவில் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துப் போன்ற விபத்துக்கள் ஏற்படுவதற்கு,

யாழ்ப்பாணத்தில் உள்ள வீதிகளில் வேகக்கட்டுப்பாட்டு எல்லைகள் குறிப்பிடப்படாமல் மற்றும வீதிச் சமிக்ஞைகள், குறியீடுகள் வீதிகளில் போடப்படாமை, சனநடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் வாகனங்களை நிறுத்துவதனாலும் இதுபோன்ற வீதி விபத்துக்கள் அதிகமாக இடம் பெற்று வருகிறது என்றார்.

இது தொடர்பாக உரியவர் கள் நடவடிக்கை எடுக்கும் பட்சத்திலேயே இவ்வீதி விபத்துக்களை ஓரளவு குறைக்கமுடியும் எனத் தெரிவித்தார். □

# கடந்த ஆண்டில் 220 பேர் காசநோயினால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் சுமார் 220 பேர் காசநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் காசநோய்க்குரிய வைத்திய சிகிச்சைகள் உரிய முறையில் வழங்கப்படாமையினாலேயே காசநோயாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது.

மயிலிட்டியில் இயங்கிவந்த காசநோய் வைத்தியசாலை கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் சேதமடைந்து கடந்த 18 வருட காலமாக அங்கு இயங்காமல் இருந்து வருகிறது. ஆயினும், வேறு இடங்களில் இவ் வைத்திய சாலை வசதிகளற்று இயங்குகின்ற போதிலும், இந்நோய்க்குரிய உரிய வைத்திய வசதிகள் குறைவாகவே காணப்படுகின்றன.

இதனால், யாழ். மாவட்டத்தில் காசநோயாளர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(தி-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பறவைக் காய்ச்சல் அபாயம் இல்லை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பறவைக்காய்ச்சல் தொற்றும் அபாயம் முற்றாக நீங்கியது என்றும் இறைச்சி முட்டை வகைகளை உட்கொள்ள எவ்வித பயமும் கொள்ளத் தேவையிலலை என்றும் விவசாய, சுகாதார அமைச்சுக்களும், இலங்கை பறவைகள் வளர்ப்புச் சங்கம் தெரிவித்துள்ளது. இந்நோய்க்கு காரணமான வைரஸ் பறவைகளை நேரடியாக தொடுவதாலேயே பரவும். இறைச்சி, முட்டைகளை உண்பதால் அல்ல என அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும், தெரிவிக்கையில், நாட்டில் பறவைக்காய்ச்சலுக்குரிய வைரஸ்கள் பரவுவதாக வெளிவந்த செய்தி வெறும் வதந்தி. அதில் உண்மை எதுவும் இல்லை. இதுவரை அவ்வாறு எந்த நோயும் இருந்ததாக இலங்கையில் ஒரு ஆதாரங்களும் கிடையாது. எனினும் இந்நோய் நாட்டை தாக்குவதை தடுப்பதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இறககுமதி மூலம்தான் நாட்டிற்குள் இந்நோய் பரவமுடியும். விலங்குகள் நோய் தடுப்புச் சட்டத்தின் கீழ் இறக்குமதிக்கான அனுமதிகளை நாம் வழங்கவில்லை. இந் நடவடிக்கை ஜனவரி 2ஆம் வாரமே மேற்கொள்ளப்பட்டுவிட்டது என்றார்.

எனினும் இது பற்றிய நிலைமைகளை கண்காணிப்பதற்கும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் விசேட குழு ஒன்று விலங்குப்பாதுகாப்பு, சுகாதார திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வைரஸ் இறைசசியில் இருப்பின் அவற்றில் 60 சதவதத்துக்கு அதனைச் சமைககும் போதே இறந்துவிடும். தற்போது கோழி இறைச்சி, முட்டை விற்பனை 10-15 சதவீதத்தால் குறைவடைந்தள்ளது. இதனால் இலங்கையில் ஒரு மில்லியன் தொழிலாளர்கள் நட்டம் அடைந்துள்ளார்கள். இது தேசிய ரீதியிலான ஆபத்து என அவர் கூறினார். (தி-06)

# பிரதேச செயலகங்களில் கடவுச்சீட்டு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

இனிவரும் காலத்தில் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான கடவுச்சீட்டு விண்ணப்பங்களை அவ்வவ்பிரதேச செயலகங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளமுடியும்.

ஆசிய நாடுகளுக்குச் செல்வதற்கான கடவுச்சீட்டு விண்ணப்பப் படிவம் ஒன்று 500 ரூபா, ஆசிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்குச் செல்வதற்கான கடவுசசீட்டு விண்ணப்பம் படிவம் ஒன்று 2 ஆயிரத்து 500 ரூபா ஆகும்.

இவ்வளவு காலமும் கடவுச்சீட்டுக்களைப் பெறுவதற்காக பல சிரமங்களின் மத்தியில் கொழும்பு சென்ற மக்கள், இனிவரும் காலத்தில் அவர்கள் வசிக்கும் கிராம சேவகர் ஊடாகவே பெற்றுக்கொள்ள முடியும். (தி-19)



அண்மையில் இடம்பெற்ற புதுமை மாதா ஆலயத் திருநாளில், உலகையே மீட்டு இரட்சிக்கும் யேசுநாதரின் அன்னை கோள்களின் நடுவில் பூமியின்மேல் வைக்கப்பட்டிருக்கும் அழகு மிகு தோற்றத்தைப் படத்தில் காணலாம். படம்:நோயல் சாவானந்தா

# வங்கியில் இலஞ்சம் பெற்ற 12 அதிகாரிகள் கைது

(கொழும்பு)

பிரமுக வங்கியில் அரசுக்குச் சொந்தமான பணத்தை வைப்பிலிட்டு, அந்த வங்கியிலிருந்து இலஞ்சம் வாங்கினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட 12 அரச அதிகாரிகளை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு கைது செய்துள்ளது.

இப் பன்னிரு அதிகாரிகளும் இலஞ்சம் பெற்றதாக லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு கிடைத்த தகவலை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகரண அபிவிருத்தி நிதியத்தின் கணக்காளர், மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைத்தலைவர், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை நிதி அதிகாரி, மகாவலி ஆலோசனைச் சபைத் தலைவர், கூட்டுறவு வங்கியின் அதிகாரிகள் உட்பட 12பேர் விசாரணை ஆணைக் குழுவினரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு நீதிமன்ற நீதிவான் சரோஜினி ருசலா விஜயவர்த்தன முன்னிலையில் இவர்களை ஆஜர்படுத்திய போது, அவர்களுக்குப் பிணை அனுமதி வழக்கப்பட்டதுடன், வழக்கை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (தி-62)

# பொதுத் தேர்தலை சனிக்கிழமை நடத்த ஜனாதிபதியிடம்கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதென தீர்மானித்து, அதனை அறிவித்துள்ளர். இந் நாள் வெள்ளிக்கிழமை ஆகும்.

அன்றைய தினம் முஸ்லிம் மக்களின் வழிபாட்டிற்குரிய தினம் என்பதால், தேர்தலை மறுநாள் சனிக்கிழமை நடத்துமாறு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில, கடந்த காலங்களில் பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் சனிக்கிழமைகளில் நடந்தன எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (தி)

சங்குநாதம்




★ ஐ.தே.முன்னணி வெற்றி பெற்றால் ஜனாதிபதி இராஜினாமா செய்வாரா? விதுரன்

★ ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டுக்குள் குழப்பம் கோவையூர் ஜெயன்

★ தேர்தல்களம் போகிறார் பாரீர் டொறிங்ரன்

வாழ்வை வளம்படுத்த துரைமுருகர் எழுதும்

என் சோதிடம்

கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள் (தொடர்கதை)

வியாசரின் பதில்கள்

சினிமாச் சிதறல்

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா. 16.00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்.

அறிவுடையார் ஆவதறிவார் அறிவிலார்
அஃதறி கல்லாதவர் -குறள்

# வலம்புரி

## அதிகரித்துவரும் வீதி விபத்துக்கள் பார்ப்பாருமில்லை தட்டிக்கேட்பாருமில்லை

யாழ்.குடாநாட்டில் தொடருகின்ற வாகன விபத்துக்கள் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. யாழ்.மாவட்டம் தென்பகுதி மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்றபோது வாகன அதிகரிப்புக்கள் குறைவாக இருந்த போதிலும், விபத்துக்களின் அதிகரிப்புக்கள் ஏனைய மாவட்டங்களைவிட மிக அதிகமாகவே உள்ளது. இதற்கான அடிப்படைக் காரணங்கள் கண்டறியப்பட்டு அதற்கான தீர்வுகள் அடையப்படாவிடில் விபத்துக்களையும், அதனால் ஏற்படக்கூடிய அவல மரணங்களையும் தடுப்பது முடியாத காரியம் ஆகிவிடும்.

எனினும் இவ்விபத்துக்களைத் தடுப்பது யார் என்ற கேள்வியே இப்போது பொது மக்களிடம் எழுந்துள்ளது. வாகன விபத்துக்களைத் தவிர்ப்பதில் பொலிஸாரின் அதீத நடவடிக்கை தேவையென்ற விவாதம் முன்வைக்கப்படும் போது, கடந்த காலங்களைப் போன்று இப்போது யாழ்.மாவட்டத்தில் இலங்கைப் பொலிஸார் தாராளமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளபோதிலும், வாகன விபத்துக்கள் தொடர்ந்து செல்வதன் தார்ப்பரியம் என்ன என்பது ஆராயப்பட வேண்டியதாகும்.

பொலிஸார் சேவையில் ஈடுபட்டுள்ள போதிலும் அவர்கள் வாகனங்களின் போக்குவரத்துக் குறித்து அக்கறை அற்றவர்களாக இருக்கின்றார்கள். அல்லது தனியார் மினிபஸ் வாகன சாரதிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையே ஏதோஒரு கொடுக்கல் வாங்கல் தொடர்பு உண்டு.

இதனால் மினிபஸ்களின் வேகமான ஓட்டம், அளவுக்கு மிஞ்சி பயணிகளை ஏற்றிச் செல்லும் பொறுப்பற்ற செயல், இவற்றையெல்லாம் பொலிஸார் கண்டும் காணாமல் இருந்துவிடுவதால் விபத்துச் சம்பவங்கள் நீண்டு செல்கிறது என்ற முடிவையும் எடுக்க முடியும்.

மேற்கூறிய காரணங்கள் பொருத்துடையதாக இல்லாதவிடத்து விபத்துக்களில் சிக்கும் வாகன சாரதிகள் மீது பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறுகின்றனர், அதனால் விபத்து நடந்தாலும் பரவாயில்லை, பொலிஸாரின் உதவியுடன் தப்பிக்கொள்வோம் என்ற சாரதிகளின் நம்பிக்கையால் விபத்துக்கள் அடிக்கடி நடந்து முடிகின்றது எனவும் அனுமானித்துக்கொள்ளலாம்.

இதில் எதுவாயினும் மினிபஸ் சாரதிகளை நம்பி, தங்கள் பயணத்தை மேற்கொள்ளும் அப்பாவிப் பொதுமக்கள் எந்த இடத்தில் எப்போது உயிரை விடவேண்டுமோ என்ற ஏக்கத்துடனேயே பயணத்தை மேற்கொள்ளுகின்றனர்.

இதேவேளை விபத்து நடந்து அதனால் உயிரையோ அன்றி உடல் உறுப்புக்களையோ இழக்க வேண்டி ஏற்பட்டாலும், வாகன சாரதிகளின் தரகர்கள் பாதிக்கப்பட்வர்களோடு தொடர்புகொண்டு கிள்ளித்தெளித்துவிட்டு வழக்கு - விசாரணை என்பனவற்றிலிருந்து பாதிக்கப்பட்டவர்களை விலகிச் செல்லத் தூண்டுகின்றனர். இதனால் தண்டனை பெறவேண்டிய சாரதிகள் லாபகமாகத் தப்பிக் கொள்கின்றனர். இதன் காரணமாகவும் விபத்துக்கள் இடம்பெற வாய்ப்பாகின்றது.

இவைதான் விபத்துக்குக் காரணமா? எனில் இல்லை என்பதே பதிலாகும். இலங்கையில் தனியார் போக்குவரத்துச் சேவை என்று அனுமதிக்கப்பட்டதோ அன்றிலிருந்து போட்டிபோட்டு ஓடி பயணிகளை ஏற்றி இறக்கும் காரியம் யாழ்ப்பாணத்தில் தாராளமாகவும் சர்வசாதாரணமாகவும் நடைபெற்றுவருகின்றது.

இதனால் பயணிகள் வாகனத்தில் ஏறவும், உரிய இடத்தில் இறங்கவும் பதற்றப்பட வேண்டிய சூழ் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக பயணிகளை ஏற்றுவதிலும், இறக்குவதிலும் மினிபஸ் நடத்துநர்கள் நடந்துகொள்ளும் முறை மிகவும் வேதனைக்குரியது. அவர்களுக்குப் பயணிகள் மனிதர்களாகத் தெரிவதேயில்லை.

ஆக, அவர்களிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய பணம் மட்டுமே அவர்களின் கண்களுக்குத் தென்படுகிறது. இதனால் வயது வேறுபாடின்றி அனைவரையும் விலங்குகள் போல் வாகனத்தில் ஏற்றியிறக்குகின்றனர். இவை மினிபஸ் நடத்துநர் - சாரதி - அதன் உரிமையாளர் - அது சார்ந்த சங்கத்தினர் போன்றோரின் மனநிலை, பண்பாடு, மனித நேயம் போன்றவற்றை மிகத்துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளது.

# பொதுத்தேர்தலில் போட்டி அதிகம்

# வன்முறை வெடிக்கும் அபாயம்

## அரசியல் ஆய்வாளர் அனீஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

**பலம்வாய்ந்த ஐக்கியதேசிய முன்னணியுடன் தீவிரவாதப் போக்குடைய ஆயுதக் குழு என வர்ணிக்கப்படும் ஜே.வி.பி. மற்றும் சிஹல உறுமய கட்சிகள் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடவுள்ளதால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்வில் வன்முறைகள் வெடிக்கும்அபாயம் இருக்கின்றது.**

**இவ்வாறு களனிப் பல்கலைக் கழகத்தின் அரசியல் துறை மூத்த விரிவுரையாளரும் அரசியல் ஆராய்வாளருமான அனீஸ் எச்சரிக்கை வெளியிட்டுள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் தொடர்ந்து நடாத்தப்பட்டுவரும் "விடியும்வேளை" நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகள் எப்படியாவது ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து விரட்டவேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டு வருகின்றன.

இக்கட்சிகளின் தூண்டுதல் காரணமாகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சர் உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களைத் தன்வசமாக்கிக் கொண்டுள்ளார்.

இதனால் தேர்தல் காலங்களில் கடமையாற்றுகின்ற பொலிஸ் நேர்மையான முறையில், பக்கச்சார்பற்ற முறையில் பீணியார்ற்றுவார்களா? என்பது சந்தேகமான விடயமாகவே இருக்கின்றது.

இது இவ்வாறு இருக்க ஜனாதிபதியினால் மிகவும் பலவீனப்படுத்தப்பட்டிருக்கும் ஐக்கியதேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் மெல்லமெல்ல பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் தாவ முயற்சிக்கின்றன. சில கட்சிகள் தனித்துநின்று போட்டியிடவும் முயற்சிக்கின்றன.

இதனால், இம்முறை ஐக்கியதேசிய முன்னணி தேர்தலில் வெற்றிபெறும் சாத்தியம் மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

கடந்த தேர்தலில் யுத்தமா? சமாதானமா? எனக்கேட்டு தேர்தலில் வெற்றிபெற்ற ஐக்கியதேசிய முன்னணி இம்முறை எதுவுமே பேசாது மௌனம் சாதித்து வருகின்றது.

கடந்த தேர்தலில் நீண்டகால யுத்தத்தால் சலித்துப் போன மக்கள் சமாதானத்தை விரும்பி ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களித்தனர். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பை ஐக்கிய தேசிய முன்னணி நிறைவேற்றவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல ஐக்கியதேசிய முன்னணி அரசு தவறிவிட்டது என்றும், அரசியல் இலாபங்களைப் பெறுவதற்காகவே எதிர்க்கட்சியில் உள்ள பிரதிநிதிகளை இணைத்துக்கொள்ளாது தான் மட்டும் தனித்துநின்று சமாதானத்தை முன்னெடுத்துச் சென்றது என்றும், ஜனநாயக ரீதியில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் எதிர்க்கட்சிகள் தெரிவித்துவரும் குற்றச்சாட்டுக்களைச் சிங்கள மக்கள் படிப்படியாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கி விட்டார்கள்.

அதுமட்டுமன்றி ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் சர்வதேச நாடுகளின் தலையீடுகள் அதிரிததிருப்பதையும் சிங்கள மக்கள் விரும்பவில்லை.

குறிப்பாக அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளின் தலையீடுகள் சிங்கள மக்களின் மனதில் குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

### மக்களின் குறை

இதேவேளை, முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களும் ஐக்கியதேசிய முன்னணயின் மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்து வருகின்றார்கள்.

சமாதானத்தை ஏற்படுத்துவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி சர்வதேச நாடுகளின் நிதியைப் பெற்றுக்கொண்டு சமாதானத்தை இடைநடுவில் கைவிட்டுவிட்டது என்றும், ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் வடக்கு - கிழக்கில் எந்தவித அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், இடம்பெயர்ந்த தம்மை இதுவரை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்தவில்லை என்றும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் குறைகூறுகின்றார்கள்.

அதுமட்டுமன்றி அரசிற்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் சமூகம் மூன்றாம்தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் எனற தமது கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது என முஸ்லிம் மக்கள் அரசுமீது குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

எனவே, ஐக்கிய தேசிய முன்னணி மீது மக்கள் வெறுப்படைந்து வருகின்றமையினால், ஆட்சிமாற்றம் ஏற்படும் அதாவது, ஐக்கியதேசிய முன்னணி எதிர்வரும் தேர்தலில் வெற்றிபெறும் சாத்தியம் அரிதாகவே காணப்படுகின்றது. அத்துடன், ஏற்கனவே கூறியதுபோல் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இலங்கையின் அரசியல் வரலாற்றில் தென்னிலங்கையில் பாரிய அரசியல் வன்செயல்களை உருவாக்கக்கூடிய தேர்தலாகவே இது அமையும் என பலராலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த அளவிற்கு இரு பலம்வாய்ந்த சக்திகள் அதாவது ஐக்கியதேசிய முன்னணி ஒருபுறமும் எதிர்தரப்பில் பொதுஜன ஐக்கியமுன்னணி உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தலில் போட்டியிடவுள்ளன.

## தேர்தல்களம்

### புலிகளின் நிலைப்பாடு

இதேசமயம் எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தாம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக உள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றார்கள். இந்த அறிவித்தலைப் பலர் வரவேற்றிருக்கின்றார்கள். ஜே.வி.பி.கூட வரவேற்றிருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால் தாம் சமாதானத்தை ஏற்படுத்துவோம் என்றும் புலிகளுடன் பேசுவோம் என்றும் ஜே.வி.பி.கூறியிருக்கின்றது.

இதன்மூலம் ஆட்சி மாற்றம் ஏற்படுகின்றபோது எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுத்துச் செல்லப்படும் சந்தர்ப்பம் இருப்பதாகத் தென்படுகின்றது. இதனால் உடனடியாக யுத்தம் ஆரம்பிக்கப்படும் என்று மக்கள் அஞ்சத்தேவையில்லை.

அதேசமயம் இனப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண முற்பட்டு விடும்என்றும் உறுதியாகக் கூறமுடியாது.

ஏனென்றால் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தினாலேயே சமாதானத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாதிருந்ததைப் பலர் அறிவார்கள்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்த கடும்போக்குடைய கட்சியான ஜே.வி.பி. சமாதானத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லுமா என்பது ஐயமாகவே இருக்கின்றது. சமாதானத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குப் பரஸ்பரப் புரிந்துணர்வும் விட்டுக்கொடுப்பும் இருதரப்புக்கும் தேவை. அத்துடன், கடந்தகால அனுபவங்களையும் இருதரப்பும் கருத்தில்கொண்டு சமாதானத்தில் பங்குகொள்ள வேண்டும்.

### அரசியல் யாப்பு தடை

இதற்கிடையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கையில் அரசியல் யாப்பே தடையாக இருக்கின்றது என பலர் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

எனவே, எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் அரசியல் யாப்பைப் புனரமைத்துத் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

இது ஒருபுறம் இருக்க ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை அமைக்கும் அதேசமயம் ஐக்கியதேசியக் கட்சிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைபபுக்கும் சரியான புரிந்துணர்வு ஏற்பட்டு ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஆட்சிப்பீடமேறவிடாது தடுத்துக்கொள்ளலாம்.

இதற்குத் தமிழ்மக்கள் அனைவரும் ஒருமித்துத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்கவேண்டும். அவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசிய முன்னணியும் அதிக வாக்குகளைப் பெற்று அரசு ஒன்றை அமைக்கும்போது தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகண்டுவிட முடியும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது என்றார்.

(தி-60,10)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உங்களிடமே நம்பிக்கை வையுங்கள். ஒரு காலத்தில் நீங்கள் வேதகாலத்தைச் சேர்ந்த ரிஷிகளாக இருந்தீர்கள். இப்போது நீங்கள் வேறுவித வடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள்.

நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைகளானால் எதற்குமே அஞ்சி நின்று விடமாட்டீர்கள். நீங்கள் சிங்கக் குட்டிகளைப் போலத் திகழ்வீர்கள்.

நாளாந்த சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சி ஆளும் கட்சியாக வெற்றிபெறும்

## முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் பிரதமருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பெரும்பான்மைப் பலத்துடன் ஆளுங்கட்சியாக வெற்றிபெறும் என்பதில் தனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பதாக இந்து கலாசார முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

என்னை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் ஓர் அமைச்சராக நியமித்தது மாத்திரமன்றி வடபகுதி மக்களின் தலையாய பிரச்சினைகள் சிலவற்றுக்கு உதவத் தேவையான நிதியுதவியையும் வளங்களையும் அளித்து வந்தமைக்காக எனது உளப்பூர்வமான நன்றியைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் இரண்டு ஆண்டுகள் அமைச்சராகக் கடமையாற்றியது எனக்கு மிக்க மனமகிழ்ச்சியை அளிக்கின்றது. பூரணமான பெரும்பான்மைப் பலம் கொண்டிருந்த ஒரு அரசாங்கத்தைக் கலைத்த செயல் குறித்து தாங்கள் கொண்டிருக்கும் மனத்தாக்கத்தில் நானும் பங்கு கொள்கின்றேன்.

வரப்போகும் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக ஆசனங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வர நானும் எனது அமைச்சு ஊழியர்களும கிடைக்கப்பெறும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் கடுமையாக உழைப்போம் என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலத்துக்குக் காலம் எனக்கு வழிகாட்டியாகவும் ஆலோசகராகவும் இருந்து வந்தமைக்கு எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## 22 இந்திய மீனவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி இன்பருட்டிக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடித்தபோது உள்ளூர் மீனவர்களால் கைது செய்யப்பட்ட 27 இந்திய மீனவர்களில் 3 படகோட்டிகளை எதிர்வரும் 27ந் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

22 மீனவர்களை இலங்கைக் கடற்படையினூடாக இந்திய கடற்படையினரிடம் கையளிக்குமாறும் 24 மணி நேரத்திற்குள் இவ் உத்தரவை நிறைவேற்றி நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேள்ளை இரண்டு படகோட்டிகள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P.: 0602212472

## மண்டைதீவு ம.வியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ் கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கத்திற்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்த கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

### ஒரு நாள் சர்வதேச கிறிக்கெற்

## நியூஸிலாந்து அணியை தென்னாபிரிக்கா வென்றது

நியூஸிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நேற்று ஒக்லாண்டில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேசக் கிறிக்கெற் போட்டியில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களின் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்கொட் சைரிஸ் 60 ஓட்டங்களையும், கிறிஸ் கெய்ன்ஸ் 58 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் மகாயா சிற்னி, நெல், குளூஸ்னர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 49.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மட்டும்இழந்து 226 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. தென்னாபிரிக்க அணி சார்பில் கிறேம் ஸ்மித் 72 ஓட்டங்களையும் பயோட்டா டிப்பென்னா ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும் ஹல்கிப்ஸ் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பில் டானியல் விக்டோரி 2 விக்கெட்டினைக் கைப்பற்றினார். (ச-121)

# திடீர் பொதுத்தேர்தல் அறிவிப்பு மனிதநேயப் பணிகளுக்குத் தடை

## ஐ. நா. மனிதவுரிமை அமைப்பின் பிரதிநிதி

வடக்கு கிழக்கில் இடம் பெயர்ந்தும், மீண்டும் நாடுதிரும்பி தற்காலிகமாக வாழும் 380 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் அகதிகளுக்கு தேர்தல் அறிவிப்பு மிகவும் அச்சத்தையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் ஜெனீவாவுக்கான நிரந்தரப் பிரதிநிதியும் எக்ஸ்கொம் அமைப்பின் அதிகாரியுமான ஜீன்-மார்க் போல்காரிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்து தற்காலிகமாக வாழும் அகதிகளைப் படிப்படியாக மீளக்குடியேற்றும் நடவடிக்கைகளை யு.என்.எச்.சி.ஆர். துரிதமாகவும் திட்டமிட்ட வகையிலும் மேற்கொண்டு வரும் நிலையில், திடீரென் அறிவிக்கப்பட்டுள்ள பொதுத்தேர்தல், மிகுந்த சிரமங்களை உண்டுபண்ணியுள்ளதுடன், இத்தகைய மனிதநேயப் பணிகளுக்கு முழுமையான தடையாகவும் அமைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று தினங்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, புத்தளம் போன்ற இன்னும் பல பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டு விரிவான ஆய்வுகளை நடாத்திய ஜீன்-மார்க், விடுதலைப் புலிகள் சமாதானத் தீர்வில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருப்பதையும், அதற்காக முழுமையான ஒத்துழைப்புத்தர ஆர்வமாயிருப்பதையும் தான் அவதானித்ததாகவும், இடம்பெயர்ந்த அகதிகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியிருப்பதைத் தான் ஆழ்ந்த கவலையுடன் கவனித்ததாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

## அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணையம் காலக்கெடு

எதிர்வரும் ஏப்ரல் 2ந் திகதி நடைபெறவுள்ள 13 ஆவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தாம் போட்டியிடுவது குறித்து இன்று சனிக்கிழமைக்கு முன் தேர்தல் ஆணையாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இதற்குள் விண்ணப்பிக்கத் தவறும் கட்சிகள் போட்டியிட அனுமதிக்கப்படமாட்டாது என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கப் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் ஏழு நாட்களுக்குள் தேர்தல் ஆணையாளரை சென்றடையக் கூடியதாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் அறிவிக்க வேண்டும்.

இலங்கையில் 46 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் கடந்த தேர்தலின் போது பதிவு செய்யப்பட்டிருந்தன.

இம்முறை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதிவு செய்யப்பட்டதை அடுத்து அவ் எண்ணிக்கை 47 ஆக அதிரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## நெதர்லாந்து தூதுவர் டக்ளஸுடன் சந்திப்பு

(கொழும்ப)

நெதர்லாந்து தூதுவர் திருமதி சுசன் பிளாங்கார்ட் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்துப்பேசி உள்ளார்.

இச்சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வூட்டர்.எல்.வில்ரனும் கலந்து கொண்டார்.

பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது எதிர் நோக்கப்படக் கூடிய பிரச்சினைகள் குறித்து இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாக ஈ.பி. டி.பி. வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## அமைச்சர் சந்திரசேகரனுடன் ஜப்பான் தூதுவர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

ஜப்பானின் பிரதித் தூதுவர் இமோஸி கருபே, மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரனைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சந்திப்பில், இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி, இனப்பிரச்சினை, மலையக மக்களின் சமூக பொருளாதார அரசியல் வாழ்வியல் உரிமைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும் என்பதை வலியுறுத்திய அமைச்சர், இலங்கைக்கான டோக்கியோ நிதியுதவி தடைப்பட்டு விடக்கூடாது என்பதையும் வலியுறுத்தியுள்ளார். மேலும் இந்த நிதியில் சமமான அளவு மலையக மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுமார் ஒரு மணிநேரம் நீடித்த இக்கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் எம்.வாமதேவன், கட்சியின் துணைத் தலைவர் பெ.இராதாகிருஷ்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீகணேசா அறநெறிப் பாடசாலையின் 2ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் புதிய கட்டடத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளது.

அறநெறிப் பாடசாலையின் தலைவர் சிவஸ்ரீ கு.தியாகராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார். (ச)

## விவரணப்படம்

(கிளிநொச்சி)

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்கத்தின் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்ற திரைப்பட வட்டத்தினால் மேரிஆன்பிலெற்சர் இயக்கிய 'அண்ணா அக்கரையில் தம்பி இக்கரையில்' எனும் டொச்மொழி விவரணப்படம் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு சங்க மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. இதில் ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என திரைப்பட வட்டத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

## 13 மாவட்டங்...

தேர்தலில் போட்டியிடவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஐ.தே.முயுடன் இணைந்து போட்டியிடுமாறு உயர் பீடத்திற்கு கட்சியின் ஏனைய அங்கத்தவர்கள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இதன்படி சகல மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிடுவது குறித்த முடிவு அடுத்த சில தினங்களில் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-6)

## அரசாங்கப்...

உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகள் முதலாம் தவணை விடுமுறைக்காக மார்ச் மாதம் 30ம் திகதி மூடப்பட்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி ஆரம்பமாகும். மீண்டும் மே மாதம் 3ம் திகதி மூடப்ட்டு யூன் மாதம் 3ம் திகதி ஆரம்பமாகும். (ச)

## நுண்கலைப்பீட மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப்பீட புதுமுக மாணவர்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவிருந்த ஆரம்ப நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி அறிவித்துள்ளார். இந்நிகழ்வு எதிர்வரும் 23ந் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-121)

## பெற்றோல் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோலின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் மேலும் 2 ருபாவால் அதிகரித்துள்ளது. (தி-60,10)

## தலைமைகளை...

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒலுவில பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் தொகையான முஸ்லிம் மக்கள் கலந்துகொண்டதுடன், முஸ்லிம் அரசியல்வாதிகள் ஒன்றுபடுவதன் அவசியம் குறித்து கோஷங்களையும் எழுப்பினர்.

## கலைநிலா அரங்கு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் மாதம் தோறும் நடாத்தும் கலைநிலா அரங்கு நாளை மாலை 7 மணிக்கு திருமறைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் திருமறைக் கலாமன்ற கலைப்பயிலகம் வழங்கும் வாய்ப்பாட்டு, இளைஞர் அவை வழங்கும் குழு நடனம், கலைஞர் கௌரவிப்பு என்பன நடைபெறவுள்ளன.

சிறப்பு நிகழ்ச்சியாக குருநகர் நாட்டுக்கூத்துக் கலையகம் வழங்கும் பண்டாரவன்னியன் நாட்டுக்கூத்தும் நடைபெறவுள்ளது. (ச)

## அரச நியமனம்..

தாபனங்கள், அரசியல் யாப்பு சபை, அரச நிறுவனங்கள் போன்றவற்றில் உள்ள சகல தரப்பினருக்கும் பொருந்தும்.

அமைச்சரவை அல்லது அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் இக் காலப்பகுதியில் புதிய நியமனங்களோ, பதவி உயர்வுகளோ வழங்கப்பட்டிருந்தால் அவை பற்றி ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படும் வரை செல்லுபடியாகுமென்றும் செயலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## ஜனாதிபதியின்...

ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்தார். அரசியல் யாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினரான எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ இதனை உறுதி செய்தார். பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவின் பதவிக்காலம் எதிர்வரும் 19 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## புலிகளின்...

கற்றல், புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி குறித்த ஆலோசனைகளிலும் சுவிஸ் அரசு தனது ஒத்தாசைகளை வழங்கும் என்றும் இப் பேச்சுவார்த்தையின் போது அவர்கள் உறுதியளித்துள்ளார்கள். (த)

## கசிப்பு உற்பத்திக்கு சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்து யாழ். நீதிமன்றில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஆஜர் படுத்தினர்.

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த தேவராசா சந்திர உதயன் என்ற இந்த நபருக்கு நீதிவான் மூன்று வாரகால சாதாரண சிறைத்தண்டனை வழங்குமாறு உத்தரவிட்டார். (தி-03)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org